விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி சங்குநாதம்

சங்கு 25
ஒலி 180 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 02 ஞாயிற்றுக்கிழமை (16.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஐ.எம்.எப்புடனான ஒப்பந்தத்தை சரியான முறையில் முன்னெடுக்க வேண்டும்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.எம்.எப் உடன் நாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தை சரியான முறையில் முன்னெ டுத்துச் செல்ல வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

சர்வதேச நாண 19

## 13ஐ தேர்தல் கால பிரசாரமாக பயன்படுத்துவதை தவிருங்கள்

### நாமல் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

தேர்தல் கால பிரசாரமாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்து வதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண் டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவே ஜனநாயக ரீதியில் அரசியல்உரிமையை வழங்கினார்எனபொது 19

## 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் என்ன பிரச்சினை உள்ளது?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி



(கொழும்பு)

அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் என்ன பிரச்சினை உள்ளது என 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் ஆர்.பி.ஜி குண்டுகள் அடையாளம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஆனையிறவு உப்பளம் அமைந்துள்ள பகுதி யில் வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி குண்டுகள் அடை யாளம் காணப்பட் டுள்ளது. 19

## அடுத்த வருடம் முதல் வாடகை வருமான வரி

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் குடி யிருப்புச் சொத்துக்களுக்கு விதிக்கப்படும் வாடகை வரு மான வரியை சர்வதேச நாணய நிதியம் அறிமுகப் படுத்த தீர்மானித் 19

## 13 தோல்வி கண்ட பொறிமுறை தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்த தயாரில்லை

### தேசிய மக்கள் சக்தி



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் தோல்வி கண்ட பொறிமுறை யாக இருந்த போதிலும் மாற்றுத் தீர்வை முன்வைக்காமல் அதனை நீக்க முடியாது என்பதுடன், தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத் துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாரில்லை எனவும் தேசிய மக்கள் சக்தி 19

## வெள்ளை ஈக்களால் தெங்குச் செய்கை பாதிப்பு

(கொழும்பு)

வெள்ளை ஈக்கள் பரவி வருவதால் தெங்குப் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டு வருவ தாக விவசாய அமைச்சு தெரி வித்துள்ளது.

இதனால் தெங்குப் பயிர்ச் செய்கை 36 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள் ளது.

வருடமொன்றுக்கு 200 கொள்கலன்கள் தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவ தாகவும் விவசாய அமைச்சு குறிப்பிட் 19

## மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள் ளது.

இதனடிப்படையில், சர்வ தேச சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 78.45 அமெ ரிக்க டொலராக 19

## யுத்த சாட்சியம் சேகரிக்கும் பொறிமுறை எந்த நாட்டிலும் இலங்கை இராணுவம் கைதாகலாம்

### சரத் வீரசேகர எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை இராணுவம் மீதான யுத்தக் குற்றச்சாட்சி யங்களை சேகரிக்கும் வெளி யகப் பொறிமுறையொன்று செயற்படுத்தப்படுகின்றதாக சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

இதனால் இலங்கை இரா ணுவ அதிகாரிகள் எந்த நாட்டிலும் கைது 19

## தமிழ்ப் போராளிகளுக்கு சிலை வைக்க நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் தம்மை அர்ப் பணித்தவர்களின் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில் யாழ்.கோட்டை சுற்றுவட்டப் பகுதியை சுற்றி சிலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வர்த்தக நிறுவனத்தில் பில் கிளார்க் (Bill Clerk) மற்றும் பொதி செய்பவர் வேலைக்கு ஆட்கள் தேவை.

**077 722 2536, 077 727 0536**
342, Hospital Road, Jaffna.

(1229)

## வீடு வாடகைக்கு உண்டு

நவிண்டில் சாண்டாந் சந்தை வீதியில் 3 அறைகள் மற்றும் Attach bathroom சகல வசதிகளுடனும் உடைய வீடு வாடகைக்கு உண்டு.

**075 497 2860**

(1235)

## வேலையாட்கள் தேவை

சுப்பர் சூஸ் 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பிக்க விரும்பியவர்கள் சுயவிபரக் கோவையை 30.06.2024 இற்கு முன்னர் தபால் மூலம் மட்டும் அனுப்பி வைக்கவும்

(1225)

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்

### திருமதி மோகனமாலா கிருஸ்ணபிள்ளை



16.06.2024

ஆசிரிய சேவையில் உன்னதம் கண்டீர்
அன்னைக்கும் மேலான அரவணைப்பு தந்தீர்
இரக்க குணத்தில் இறைவனை வென்றீர்
ஆசிரியப் பணியின் அர்த்தம் நீரே!

அதிபராய், பிரதி அதிபராய், ஆசிரியராய்
ஆளுமை கொண்டே அத்தனையும் கண்டீர்
கண்ணியம் தவறாத காரிகை நீரே
காவிய நாயகி என்றே வாழ்ந்தீர்

அகவை அறுபதைக் கடந்த போதும்
இளமையும் துடிப்பும் நிறைகுடமே
நலமும் வளமும் பெருகியே என்றும்
மாறாப் புகழுடன் நீடூழி வாழ்க
வாழ்க வாழ்க வாழ்கவே!



Best Wishes!

வாழ்த்துவோர்:
பழைய மாணவர்கள், ஆசிரிய நண்பர்கள்
கிளி/ உருத்திரபுரம் ம.வி

(1238)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

**Golden Real Estate (pvt) Ltd**
**077 029 4164, 077 329 4130, 077 294 1521**

(1217)

## Poovithazh fashion academy

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்

- ❑ தையல் பயிற்சி வகுப்புக்கள்
- ❑ ஆரி எம்பிராய்டரி பயிற்சி வகுப்புக்கள்

**Mega Offer 25%**

30.06.2024 இற்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

315 1/2, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**075 233 8091**
**076 751 3006**

(C-0604)

# ஒரு மாதமாகியும் காணவில்லை



## வைத்திலிங்கம் கனகலிங்கம்

எனும் 82 வயதுடைய, காலில் காயமுள்ள, அதிகம் நடக்க முடியாத வயோதிபர் 12.05.2024 அன்று புங்குடுதீவு மடத்து வெளியில் உள்ள தனது வீட்டின் முன் காணாமல் போயுள்ளார்.


(G.S பிரிவு J/23) மூப்பின் காரணமாக உள்ள ஞாபக மறதியால் வீடு திரும்ப முடியாமல் அவதிப்படும் நிலையில் இருக்கலாம். வயதின் காரணமாக இவரால் தனிப்பட செயற்பட முடியாது. தயவு செய்து இவரைக் காண்பவர்கள் இவரைப் பற்றிய தகவலை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தரவும்.

நன்றி

**071 999 9306, 074 090 9597**
**077 888 8603, 076 834 0781**
**076 336 5770**

(1244)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**SLIIT NORTHERN UNI** யின் நான்கு வருட கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Data Science
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

(223)

**SLIIT CITY UNI Program at NorthernUni**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Management.
- BA (Hons) Business Administration.

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி

**26 JUNE 2024**

தகுதிகாண் பரீட்சை
**29 JUNE 2024**
(10:00AM TO 11:00AM)

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

SLIIT | NORTHERN UNI

Call us now:
**077 147 1471**

northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்

தென்னாடு

## சைவ அறங்காவல் – முழுநாள் கருத்தரங்கு

இடம்: சங்கிலியன் அரங்கம் – வலம்புரி நட்சத்திர விடுதி
காலம்: ஆனித்திங்கள் 29ம் நாள் (13/07/2024)

ஆனி மகம் முத்தமிழ் வாதவூரர் குருபூசையை முன்னிட்டு, சைவநீதி மற்றும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபை நடாத்தும் "சைவ அறங்காவல்" முழு நாள் கருத்தரங்கு ஆனித் திங்கள் 29ம் நாள் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கு குறிப்பாக சமய ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், இந்து இளைஞர் கழகங்கள், திருக்கோயில் அறங்காவலர் சபையினர், பல்கலைக் கழக இந்து மாணவர் சங்கங்கள், மற்றும் சைவ சமயத் தலைவர்களை கருத்தில் நிறுத்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் தலைமை
சிவத்திரு.செந்தமிழாதன்
(இளம்புலவர், தென்னாடு.)





"திருமுறைச் சிறப்பு மற்றும் சாத்திரச் சிறப்பு"
செந்தமிழாக முனைவர்.கி.சிவகுமார்
(தமிழ்நாடு)



"இலங்கையில் சைவம் அன்றும் இன்றும்"
சிவத்திரு.சந்திரமௌலீசன் லலீசன்
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.)



"மேன்மைகொள் சைவநீதி"
சிவத்திரு.குணா துரைசிங்கம்
(முதல்வர், சைவநீதி)



"சைவ அறங்காவல்"
சிவத்திரு.குணரத்தினம் பார்த்தீபன்
(முதல்வர் . தென்னாடு.)

(C-0606)

பங்குபற்ற விரும்பும் சைவத் தலைவர்கள் ஆனித் திங்கள் 17ம் நாளுக்கு (1–யூலை–2024) முன்னதாக இந்த இணைப்பில் பதிவு செய்துகொள்ளுங்கள். இந்தக் கருத்தரங்கிற்கு நூறு இருக்கைகள் என மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பதிவு ஒழுங்கில் முன்னுரிமை கொடுக்கப்படும்.

வழங்கல்கள்:
(1) காலை, மாலை – சிற்றுண்டி மற்றும் குளிர்பானம் / தேநீர்
(2) மதிய உணவு
(3) பங்குபற்றியமைக்கான சான்றிதழ்
(4) தேவை அடிப்படையில் போக்குவரத்துக்கு கொடுப்பனவு

பதிவு செய்ய அழையுங்கள் 0707701111.
https://www.thennadu.org/nikalvuviparam.php?id=6

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில்.



'நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் காரணம்
என்னிடம் அதிகமாக இருப்பதால் அல்ல
இல்லாதவனின் வலியை புரிந்து கொண்டதால்'


## (௨௨) விற்பனைக்கு (௨௨)

- யாழ்ப்பாணம் KKS வீதியில் யாழ்.சிவன் கோயிலுக்கு அண்மையில் KKS வீதி முகப்புடன் 5 பரப்புக் காணியும்
- யாழ்.KKS வீதியில் பன்றிகுட்டி பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் KKS வீதி முகப்புடன் 4 கடைகளும் வீடும் அமைந்த 5 பரப்புக் காணியும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4½ பரப்புக் காணியும்
- யாழ். மின்சார நிலைய வீதியில் முதலாம் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணியும் வீடும்
- யாழ்.மின்சார நிலைய வீதி 2ஆம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் New Marketக்குமுன்னால் 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும்
- மன்னார் நகருக்கு அண்மையில் 36 பரப்பில் அமைந்த நவீன கோட்டா மில்லும் 4 கடைத்தொகுதியும்
- கொழும்பு வெள்ளவத்தை விவேகானந்த வீதியில் 6 பேர்ச்சஸ் மாடி வீடும்
- யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்பும் 2 பரப்புக் காணியும்
- யாழ்.விக்ரோரியா வீதியில் 12 பரப்புக் காணியும்
- யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 14 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் தனிக்கடையும் விற்பனைக்குண்டு.

கனகசபை தர்மகுலசிங்கம்
இல.183, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.185, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
077 723 2535

(C-0603)


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1938 . 11 . 23 | 2024 . 06 . 14 |

## சிவஸ்ரீ. நடராஜாக் குருக்கள் சோமசுந்தரம் ஐயா

(ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர், மாவட்டச் செயலகம் – கிளிநொச்சி, ஆங்கில ஆசிரியர், ஆதீனகர்த்தா, இருபாலை வேளாதோப்பு மதுரை மஹா முத்துமாரியம்பாள் தேவஸ்தானம்)

இருபாலை வேளாதோப்பைப் பிறப்பிடமாகவும் இருபாலைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ. நடராஜாக்குருக்கள் சோமசுந்தரம் ஐயா அவர்கள் 14.06.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாக்குருக்கள் – இரத்தினவல்லி அம்மாவின் கனிஷ்ட புத்திரனும் இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கந்தசாமி ஐயர் – சோதி அம்மா தம்பதிகளின் மருமகனும் பத்மாசினிதேவியின் அன்புக் கணவரும் தவநடராஜா (அதிபர் – யாழ்.வேலணை சரஸ்வதி வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு தந்தையும் ரஜனி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் – தொழிற்துறைத் திணைக்களம்) அவர்களின் பாசமிகு மாமனாரும் துளசிகா, தருணன் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்ற பொன்னையா, தையல்நாயகி ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இருபாலைச் சந்தி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(1239)

தகவல்: குடும்பத்தினர்
077 636 0290

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 - 10 - 1994 | 16 - 06 - 2014 |

### அமரர் ரவீந்திரன் சுகிர்தன் (சுகிர்)

(செந்தூரன் பந்தல்)

எங்கள் ஆருயிர் செல்வமே!
உன் முகம் காணாது தவிக்கின்றோம்! நாம்
நீ வரும்வேளை காத்திருக்கும் நாம்
இன்று கண்ணீர் மல்க கலங்குகின்றோம்
கல்லூரி சென்.ஜோன்ஸில் கற்றுத் தேர்ந்தாய் இனியவனே
செல்லமே! உன் குரல் கேட்டு
பத்தாண்டு ஆனதையா
உன் முகம் காண இன்னொரு பிறப்பு
எடுத்து வருவாய் என் செல்வமே!
உன் ஆத்மா சாந்தி பெற அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

(1246)

செந்தூரன் பந்தல்
அரசடி வீதி, கோண்டாவில் கிழக்கு.

இங்ஙனம் – குடும்பத்தினர்
077 320 5613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மணல் அகழ்வு
## மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது



(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கவயன் குடியிருப்பு பகுதியில் அடாத்தாக பிடிக்கப்பட்ட காணியில் கனிய மணல் அகழ்வு இடம்பெற இருந்த நிலையில் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. கவயன் குடியிருப்பு பகுதியில் சுமார் 160 ஏக்கர் பனை மரங்களை கொண்ட குறித்த காணி சட்ட விரோதமாக பிடிக்கப்பட்டு அடைக்கப்பட்டுள்ளது.

இந்திய தனியார் கம்பனி ஒன்றிற்கு கனிய மணல் அகழ்வுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த காணியில் உள்ள பல நூற்றுக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டு. கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வருவதாக அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் குறித்த காணிக்குள் நேற்று காலை வருகை தந்த சிலர் காணியில் கனிய மணல் அகழ்வில் ஈடுபட நடவடிக்கை எடுத்த நிலையில் அப்பகுதி மக்கள் ஒன்று கூடி எதிர்ப்பை தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மக்களுடன் கலந்துரையாடியதை தொடர்ந்து பின்னர் அடாத்தாக பிடிக்கப்பட்ட காணி பகுதிக்குச் சென்று அங்கு பொறுப்பாக இருந்தவருடன் கலந்துரையாடியதுடன்,மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றமையினால் இவ்விடத்தில் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்க வேண்டாம் என்றும் மக்களுடன் பிரிதொரு தினத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த காணியில் நின்ற உரிய நபர் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காத நிலையில் அங்கிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)




# மரண அறிவித்தல்

## திருமதி.சறோஜினிதேவி குலசேகரம்

அல்லையம்பதி துன்னாலையை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிட மாகவும் கொண்ட காலஞ்சென்ற நடராசா அழகம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற வடிவேலு மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும் கௌரி டிரேடர்ஸ் (Colombo) உரிமையாளர் வடிவேலு குலசேகரத்தின் மனைவி சறோஜினிதேவி குலசேகரம் அவர்கள் 14.06.2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் வசந்தி (London), ஜெயந்தி (London), நிதர்ஷன் (London) ஆகியோரின் தாயாரும் ரமேஷ் (London), சுரேஸ் (London),கயலாணி (London) ஆகியோரின் மாமியாரும் நிக்கேஷ், அக்ஷயா, சாஸ்விகா, சாஸ்வின் ஆகியோரின் அம்மம்மாவும், ஆகாஷ் இன் அப்பம்மாவும் காலஞ்சென்ற வடிவேலு கந்தசாமி, வடிவேலு சந்திரசேகரம், ராஜேஸ்வரி உபாசரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், நடராஜா இரத்தினராஜா, காலஞ்சென்ற நடராஜா பாலசந்திரன் ஆகியோரின் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 16.06.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அன்னாரின் பிறப்பிடமான அல்லையம்பதி துன்னாலை கரவெட்டிக்கு எடுத்துச்செல்லப்பட்டு 17.06.2024 நாளை திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் (அல்லையம்பதி துன்னாலை) அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் பிற்பகல் 1.00 மணியில் இருந்து கிரியைகள் ஆரம்பித்து 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18.10.1951 | 14.06.2024 |

**அல்லையம்பதி,**
**துன்னாலை, கரவெட்டி.**

(சி-602)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நவீன பொதுமலசலகூடங்கள் நிர்மானம் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர்ப்பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய பொது மலசலகூடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான திட்டவரைபுகள் தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

யாழ்.மத்திய பேருந்து நிலையம் மற்றும் நகரப் பகுதிகளுக்கு தினமும் வரும் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் தேவை கருதி நகரப் பகுதியில் நவீன வசதிகளை கொண்ட பொது மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு அமையவே நேற்று குறித்த திட்ட வரைபுகளை இறுதி செய்யும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது

இந்நிலையில் குறித்த மலசல கூட தொகுதியை அமைப்பதற்கான திட்ட வரைபுகள் இறுதி செய்யப்பட்டதுடன் குறித்த திட்டத்தை துரிதமாக முன்னெடுக்குமாறும் அமைச்சர் துறைசார் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

யாழ் மாநகர ஆணையாளர், பொறியியலாளர்கள் அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர். (நி-6-33)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.

திருமதி. யசோதா திரவியம்



மண்ணில் 31.05.1966

விண்ணில் 20.06.2021

அன்பின் அதி உன்னத தாயாய்
எம்மில் அளவு கடந்த அன்பைப் பொழிந்தாய்
எம்மை எவர்க்கும் விட்டுக் கொடுக்காது
எம் அன்பில் வாழ்ந்தாய்
விதி செய்த சதி எம் தாயை
எம்மிடமிருந்து பிரித்து விட்டதே!
தாயே நீ சேயாய் - மறுபடி
எம் குடும்பத்தில் வந்து பிறந்திடம்மா!

(1230)

இல.22, 2ம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். 021 222 1704

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


## இராசிபலன்

16. 06. 2024
ஆனி 02, ஞாயிற்றுக்கிழமை
தசமி பின்னிரவு 4.18 மணிவரை

அத்தம் முற்பகல் 11.19 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - அவிட்டம், சதயம்

வளவன்

**மேஷம்** சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர்,பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**துலாம்** எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம்.

**மகரம்** ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**சிம்மம்** வார்த்தைகளில் நிதானம் தேவை, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** சவால்கள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள்.

**மிதுனம்** பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**தனுசு** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

வந்த வழியை மறந்திருந்தால் எந்த பதவியும் பறிபோகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 446
Viber 076 636 3378



# 13 அமுலானால் தமிழீழம் மலரும்

## தெற்கில் விசமப் பிரசாரம்

குறுகிய சுயநல அரசியல் மனப்பான்மையுள்ளவர்கள் அரசியல் தளத்தில் இருக்கின்றமையினாலேயே இலங்கையில் இன்று வரை சமாதானம் மலரவில்லை என்ற உண்மையை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

இதற்கு பெரும்பான்மை ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள் முழுக் காரணமாகின்றனர்.

சிறுபாண்மைத் தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளினூடே அவர்கள் நிலத்தையும் வளத்தையும் அபகரிக்கும் செயற்றிட்டத்தில் மிகத் தீவிரம் காட்டிவரும் பெரும்பாண்மை ஆட்சியாளர்கள் தமிழினத்தை அடிமைப்படுத்த எத்தணித்ததன் விளைவையே இன்றுநாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நாட்டில் வாழும் அனைவருக்கும் இந்த நாடு சொந்தம் என்ற பொதுவுடமை அற்று இது சிங்கள, பௌத்த நாடு என்று தனியுடமை ஏற்பட்டதால் வந்த விளைவை, சிங்கள மக்கள் மத்தியில் தவறாகச் சித்தரித்து, அதை ஒரு இனக்கலவரமாக்கிய பெருமை பெரும்பாண்மை ஆட்சியாளர்களையே சேரும்

சிறுபாண்மைத் தமிழினத்துக்கு எதிரான அடக்குமுறைகளை மிகத்தீவிரப்படுத்தி தமிழ் இளைஞர்களுக்கு சினம் ஏற்றி அவர்களை ஆயுதம் ஏந்தச் செய்த செயல் நூற்றுக்கு நூறு விகிதம் பெரும்பாண்மை ஆட்சியாளர்களையே சாரும்.

> **பதவி ஆசைக்காய் மீண்டும் இந்த நாட்டில் கொடும் தீ மூள்வதற்கு காரணமாக யார் இருந்தாலும் அவர்களை அடையாளம் கண்டு தூக்கி எறிய வேண்டிய பொறுப்பு இந்த நாட்டின் பிரஜையாக எம் ஒவ்வொருவருக்கும் உண்டு**

அரசுக்கு எதிராக போரிடுவதென்பது சர்வசாதாரணமான செயல் அல்ல என்பதையும் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதையும் தமிழ் இளைஞர்கள் அறியாமல் இல்லை.

ஆயினும் தமிழினத்துக்கான உரிமைகளைப் பெற்றுத்தர அப்போது அவர்களிடம் வேறு எந்த நிலைப்பாடும் இருந்திருக்கவில்லை.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போரை திசை திருப்ப ஆட்சியாளர்கள் அவர்களுக்கு பயங்கரவாதிகள் என்று முத்திரையிட்டனர்.

இம் முத்திரை ஒட்டுமொத்த தமிழ் மக்கள் மீதும் குத்தப்பட்டதுதான் கொடுமை. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என சர்வதேசத்திற்குப் பறைசாற்றிய இலங்கை ஆட்சியாளர்கள் அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்து அழிப்பதில் மிகக் கவனம் செலுத்தினர்.

போர் சூழ்ந்திருந்த காலப் பகுதியில் பல்வேறு ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் தமிழ் மக்கள் மீதான கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை அனைத்து தரப்பினரிடமும் ஒரே மாதிரியாகவே இருந்தது.

அழிக்கப்படும் அப்பாவிப் பொதுமக்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற சிந்தனையில் இருந்து விலகியவர்கள் அவர்களையும் பயங்கரவாதப் பட்டியலுக்குள் திணித்தனர்.

இதன் விளைவு இலங்கை ஆட்சியாளர்கள் மீதான வெறுப்பு தமிழ் மக்களின் மனங்களில் அதிகரிக்கவே செய்தன.

தமிழ்மக்கள் பூர்வீக நிலங்களையும் அவர்களின் வளங்களையும் அபகரிக்கும் பெரும்பாண்மை ஆட்சியாளர்களின் சூழ்ச்சியை முறியடிக்க 1987 ஆம் ஆண்டு இந்திய அரசினால் இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இது இலங்கையின் 13 ஆவது திருத்த சட்ட மூலமாக முன்மொழியப்பட்டது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் தமிழ் மக்களுக்கு அதிக ஆர்வம் இருந்திருக்கவில்லை. ஏனெனில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் தமிழினத்தின் ஒட்டுமொத்த அபிலாஷைகளையும் வெளிக்கொணரும் வகையில் இருக்கவில்லை. இதனாலேயே தமிழினம் இதனை தமக்கான முழுமையான தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டு இருந்தமை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகவே பார்க்கப் பட்டது.

13 இல் உள்ள காணி பொலிஸ் அதிகாரங்களை பெரும் பாண்மை ஆட்சியாளர்கள் தெற்கில் தவறாக பிரசாரம் செய்யத் தொடங்கினர். சிறுபாண்மைத் தமிழினத்துக்கு தனிநாட்டை வழங்குவ தற்கு 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் வழிவகுக்கிறது. நாட்டை பிரிக்கும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் எமக்குத் தேவை இல்லை என்று விசமப் பிரசாரம் செய்யத் தொடங்கினர். அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

இன்று சிங்கள மக்கள் 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை முழுமையாக எதிர்ப்பதை அவதானிக்கக்கூடியதாவுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் தமிழ்



மக்களுக்குரிய முழுமையான தீர்வல்ல. 13 ஐயும் தாண்டிய தீர்வையே தமிழினம் எதிர்பார்ப்பதாக இன்று வரை தமிழ் அரசியல் தலைவர்கள் ஆணித்தரமாகக் கூறி வருகின்றனர். தமிழினத்தின் முடிவும் அதுவாகவே இருக்கிறது.

நிலை இதுவாக இருக்கையில் கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வடக்கிற்கு விஜயம் செய்து பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்திருந்தார். நிகழ்வொன்றில் பேசிய சஜித் பிரேமதாஸ நான் ஜனாதி பதியானால் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக அமுல் படுத்துவேன் என்று கூறியிருந்தார்.

இதுவே தற்போது தெற்கில் பேசு பொருளாக மாறியிருக்கிறது. சஜித்தின் குறித்த பேச்சிற்கு எதிராக தெற்கு அர சியல்வாதிகள் பலர் எதிர்ப்புக் கருத்தை கூறத் தொடங்கியதுடன் அவருக்கு எதிராக கொழும்பில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தி தமிழினத்திற்கு நாட்டை பிரித்துக் கொடுக்கப் போகிறார் சஜித் பிரேமதாஸ என அவருக்கு எதிராக போராட்டங்களை நடத்தி தெற்கில் அவருக்கு எதிராக அலை ஒன்றை ஏற்படுத்த முற்படுகின்றனர் எதிர்க்கட்சியினர்.

இங்கு தான் சிங்கள மக்கள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். முதலில் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் என்ன இருக்கிறது என்பதையும் அதை பிரயோகித்தால் அது நாட்டைப் பிரிப்பதற்கு ஒப்பானதா என்பதையும் நுணுகி ஆராய வேண்டும்.

அதைவிடுத்து தமது சுயநல அரசியல் இலாபத்திற்காக செயற்படும் அரசியல்வாதிகளின் மாயவலைக்குள் அவர்கள் வீழ்ந்து விடக்கூடாது.

இவை அனைத்தையும் விட தமிழ் மக்களினால் முழுமையான தீர்வாக ஏற்றுக் கொள்ளப்படாத 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துவேன் என்ற சஜித்தின் வார்த்தைக்கு இவ்வளவு எதிர்ப்பு எனின் இவர்களின் குறுகிய மனப்பான்மையையும் ஆண்டான், அடிமை மனோபாவத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

தவிர வடக்கு மக்கள் ஆதரிக்கும் பெரும்பாண்மை வேட்பாளர்களுக்கு புலிச்சாயம் பூசி இவர் புலிகளுடன் ஒன்று சேர்ந்து விட்டார். இவர் ஆட்சிக்கு வந்தால் தமிழீழத்தைப் பிரித்து கொடுத்திடுவார் என்ற விசமப் பிரசாரங்களைச் சிங்கள மக்கள் கவனத்தில் எடுத்து விடக் கூடாது.

தமிழினமும் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளே என்ற சிந்தனையை மனதில் விதைத்து அவர்களுக்கு நீதியான தீர்வைப் பெற்றுத்தர ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்.

ஏனென்றால் உரிமைகேட்டதனால் தமிழினம்பட்ட துன்பம் ஏராளம். தமிழினம் இழந்த இழப்பு கூற முடியாதது. தமிழினம் பட்ட பாடு மிகக் கொடுமையானது.


சொந்தம், பந்தம், சொத்து இவை அனைத்தையும் விட விலைமதிப்பில்லாத பல்லாயிரம் உயிர்களையும் இழந்து நீதிக்காக ஏங்கி நிற்கிறது தமிழினம்.

இதைப் புரிந்து கொள்ளாமல் அற்ப பதவி ஆசைக்காய் மீண்டும் இந்த நாட்டில் கொடும் தீ மூள்வதற்கு காரணமாக யார் இருந்தாலும் அவர்களை அடையாளம் கண்டு தூக்கி எறிய வேண்டிய பொறுப்பு இந்த நாட்டின் பிரஜையாக எம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சும்மா இருக்கும் போட்டி



இன்றைய நவீன காலகட்டத்தில் 'சும்மா தான் இருக்கேன்' என்று சொன்னால்க் கூட கையில் போன் வைத்துக் கொண்டு இன்ஸ்டாகிராம், யூடியூப் என்று எதையாவது பார்த்துக் கொண்டோ அல்லது வீடியோ கேம்ஸ் விளையாடிக் கொண்டோ தான் இருக்கிறார்கள். ஆனால், வடிவேலு சொன்ன மாதிரி யாருமே நிஜமாகவே 'சும்மா' இருப்பதை ஏதோ தரக் குறைவாக நினைக்கிறார்கள்.

உலகில் என்னென்னவோ போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தென் கொரியா வித்தியாசமாக "ஸ்பேஸ்- அவுட்" என்ற போட்டியை நடத்தியது. அதாவது 90 நிமிடங்கள், எந்த வேலையும் செய்யாமல், தூங்காமல், போன் பார்க்காமல், அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும். இவ்வளவு தானே என்று ஈசியாக எண்ணிவிட முடியாது. போட்டியாளர்களின் இதயத் துடிப்பு சீராக இருக்கிறதா என்று கண்காணிக்கப்படுகிறது.

மேலும் பார்வையாளர்களால் வாக்களிக்கப்பட்ட முதல் 10 போட்டியாளர்களில் யாருக்கு நிலையான இதயத் துடிப்பு இருந்ததோ அவர்களே இந்த போட்டியின் வெற்றியாளர் என்று அறிவிக்கப்படுவார்.

அதிக நேரம் வேலை பார்த்துக்கொண்டே இருப்பதால் பலரும் ஸ்ட்ரெஸ், டென்ஷன் என பல மனநல நோய்களுக்கு ஆளாகிறார்கள். அனைவருக்கும் கண்டிப்பாக ஒரு இடைவேளை தேவைப்படும் என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காகவே இப்போட்டியை துவக்கியுள்ளனர்.


மே 15 ஆம் திகதி தென்கொரியாவின் தலைநகரான சியோலில் நடைபெற்ற போட்டிக்கு கிட்டதட்ட 4,000 போட்டியாளர்கள் பதிவு செய்திருந்த நிலையில், 117 போட்டியாளர்கள் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். 6 வயது சிறுவன் முதல் 60 வயது முதியவர் வரை பங்கேற்றுள்ளனர். 5 முறை ஒலிம்பிக்கிற்கு முயற்சி செய்து இரண்டு முறை வெள்ளி பதக்கம் வென்ற க்வாக் யூன் ஜீ- யும் இம்முறை போட்டியில் பங்கேற்று மூன்றாவது இடத்தை வென்றுள்ளார்.

நம்ம ஊருலையும் இப்படி ஒரு போட்டி நடத்தினா நல்லாத்தான் இருக்கும்!

## வீட்டில் பண மழை பொழிய...

வாஸ்து என்றால், பொருள்கள் அதாவது வஸ்துக்கள் இருக்கும் இடங்கள் என்பது பொருள். வாஸ்துவுக்கான தெய்வத்தை வாஸ்து புருஷன் என்று வணங்குகிறோம். வாஸ்து முறைப்படி வஸ்துக்களை அமைத்தால் வாஸ்து புருஷனின் ஆசிகள் பெற்று வளமோடு வாழலாம்.

1. வீட்டில் வடக்குத் திசையில் சிறிய பணப் பெட்டி அல்லது உண்டியலை வைப்பது சிறப்பு. இதனால் வீட்டில் செல்வம் நிறைந்திருக்கும்.
2. வாஸ்துபடி எப்போதும் ஒருவரின் கையில் பணம் தவழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் வீட்டின் வடக்குச்சுவர் ஜன்னலுடன் இருக்க வேண்டும். ஜன்னல் எப்போதும் திறந்தே இருக்க வேண்டும். காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் வாஸ்து சாஸ்திரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால், ஜன்னல்கள் திறந்திருப்பது நல்லது. பூச்சித்தொல்லை கொசுக்கள் உள்ளே வருமென்றால், நைலோன் வலை போட்டுக்கொள்ளலாம். எந்தத் தவறும் இல்லை.
3. வீட்டில் பணம் சேருவதற்கு வடக்கு திசையும் ஜன்னலும் எந்த அளவு முக்கியமோ அந்த அளவு தென்மேற்கு திசை முக்கியம். இங்குதான் நாம் பணத்தை வைக்க வேண்டும். வடமேற்கு மூலையில் பணத்தை வைக்கக் கூடாது.



4. பீரோ வடக்கு திசையைப் பார்த்து இருக்க வேண்டும். பீரோவைத் திறக்கும்போது நம் முதுகு வடக்கு நோக்கி இருக்க வேண்டும்.
5. பணத்தை எப்போதும் மரப்பெட்டியில்தான் வைத்து எடுக்க வேண்டும். தேக்கு மரத்தால் செய்யப்பட்ட பணப் பெட்டி என்றால், மிகவும் விசேஷம். பணம் செலவழியாமல் தேங்கும் பெருகும்.
6. நகைகள், பணம் சேமிக்கப்படும் பாதுகாப்பு அலுமாரியானது வெள்ளை அல்லது மஞ்சள் நிறத்தில் இருப்பது விசேஷம்.
7. வடக்கு, மேற்கு அல்லது தென்கிழக்கு திசைகளில் குப்பைத் தொட்டி அல்லது குப்பைகள் வைக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தவும்.
8. நல்ல விஷயங்களுக்குத் தாராளமாகச் செலவு செய்யுங்கள். உங்களை எப்போதும் செல்வந்தராகவே எண்ணிச் செலவு செய்யுங்கள். அப்போதுதான் பணம் உங்களைத் தேடி மீண்டும் மீண்டும் வரும். ஆலய திருப்பணிகள், ஏழைப் பெண்களின் திருமணம், ஏழைப் பிள்ளைகளின் படிப்புக்கு பணம் செலவழிப்பது சிறப்பு.
9. உங்களுக்கு வருகிற பணத்தை சிவப்பு நிறத் துணியில் சுற்றி மரப்பெட்டியில் வைக்கும்போது, அந்தப் பணம் பல மடங்காகப் பெருகும்.
10. பொதுவாக நீல நிறம் கண்களுக்கு இனிமையானது மனதுக்கு மகிழ்ச்சியைத்தரும். ஆனால் தென்கிழக்குத் திசையில் உள்ள நீலம் பண இழப்புகளுக்குக் காரணமாகிறது. தென்கிழக்கில் நீல நிறம் இருந்தால், வேறு வண்ணம் பூசலாம்.
11. பணத்தை ஒருவரிடம் கொடுக்கும்போது பணத்தை மடித்துக் கொடுக்க வேண்டும். மடிப்பு அவர்களின் பக்கமும் திறப்பு நம்முடைய பக்கமும் இருக்கும்படி கொடுங்கள்.
12. பணப்பெட்டியில் எப்போதும் ஒரு நறுமணம் இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கிகரிக்கப்படாத நாடுகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் களமாடிய தமிழீழ மங்கையர் உதைபந்தாட்ட அணி தொடர்பில்?

**சுதன் — குப்பிளான்**

**தமிழ் அரசியல் தளத்தில் முந்திவந்த செவியை பிந்தி வந்த கொம்புகள் மறைக்கிறதே?**

என்னதான் கொம்புகள் செவியை மறைத்தாலும் செவியே சிறந்தது.செவி ஒரு விடயத்தை கேட்டு, கிரகித்து, அறிந்து அதன் வழி நடக்க வல்லது.

ஆனால் இந்தக் கொம்புகளுக்கு வன்முறை மட்டுமே தெரியும். அது எதிரிகளிடத்தேயும் பாயும் தன் சகாக்களிடத்தேயும் பாயும்.

கொம்புகளுக்கு குத்த மட்டுமே தெரியும். தயவு செய்து ஒரு நாளும் கொம்புகளை செவிகளுடன் ஒப்பிடாதீர்கள் பிளீஸ்.

**தாரகை — வடமராட்சி**

**நல்லதைப் பாராட்டும் எண்ணம் எம்மிடம் இல்லாது போய்விட்டதே வியாசரே?**

உண்மை தான். தவறை தூக்கிப் பிடிக்கும் எமக்கு நல்லதைப் பாராட்டத் தெரியாது போனது வேதனையே.

அண்மையில் கோப்பாய் அம்மாச்சி உணவகத்திற்குச் சென்றிருந்தேன். உணவின் தரம், சுவை, விலை என்பன மிக உன்னதமாக இருந்தது.

வீட்டில் அம்மாவின் கையினால் உணவு உண்டு மகிழ்ந்த திருப்தி.

1பூரி , 1 கடலை வடை, 2 தோசை, 1 சோடி பால் அப்பம், 1 பிளேன்ரி வெறும் 250 ரூபாய். மனமும் வயிறும் நிறைந்தது. அன்னையர்க்கு அன்பு நிறை வாழ்த்துக்கள்.

**சி.இளங்கோ — மானிப்பாய்**

**தன் வாழ்வில் ஏற்படும் வலிகளும் தவறுகளும் தன் பிள்ளைகளுக்கு வரக்கூடாது என பெற்றோர் சிந்தித்து நடந்தாலும் சிலருக்கு அது தவறாகிப் போய்விடுகிறதே வியாசரே?**

நாம் பெற்றோர் என்பதற்காக பிள்ளைகள் மீது அதிக உரிமைகளை எடுத்துவிடக் கூடாது. நல்லது எது, கெட்டது எது என்பதைச் சொல்லிக் கொடுக்கலாம். அதிலிருந்து நல்ல முடிவை எடுக்கும் உரிமையை அவர்களிடமே விட்டுவிட வேண்டும்.

ஏனென்றால் எம் பிள்ளைகளின் வாழ்க்கையில் முழுவதும் நாம் இருந்துவிடப் போவதில்லை.

நாம் அவர்களை சிந்திக்கவோ, முடிவுகளை எடுக்கவோ பழக்கப்படுத்தாமல் கட்டுப்படுத்தினால் நாம் இல்லாதபோது அவர்களின் வாழ்வு கேள்விக் குறியாகிவிடும்.

இதை பெற்றோர்களாகிய நாம் மிகவும் கவனமாக கருத்தில் எடுக்க வேண்டும்.எமது பிள்ளைகள் வாழ்வில் நன்றாக வாழ வேண்டும் என்று விரும்பினால் இதை நாம் செய்தே ஆக வேண்டும்.

That's all.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**டனுஷாந் ராசா — திருநெல்வேலி**

**அங்கிகரிக்கப்படாத நாடுகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் களமாடிய தமிழீழ மங்கையர் உதைபந்தாட்ட அணி தொடர்பில்?**

உள்ளம் பூரித்து போனது. உலக அரங்கில் வீரத் தமிழர் நெஞ்சில் பொறிக்கப்பட்ட தமிழை கண்டபோது இறைவா இதைக் காண என்ன தவம் செய்தோம் என்ற மனநிலையே இருந்தது.

வெற்றி கிடைத்தது,தோல்வியால் வருத்தம் என்றதெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்லை.

தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அதற்கொரு குணமுண்டு அமிழ்தம் அவரது மொழியாகும். அன்பே அவரது வழியாகும்.என்ற பொன்மொழி காதில் தேனாகப் பாய்ந்தது.


**திகான் — வடமராட்சி**

**பத்தாயிரம் கோடி அமெரிக்க டொலர் கடனை திருப்பிக் கொடுக்க முடியுமா வியாசரே?**

இந்தக் கடனை அடைப்பதற்கு ஒரு சிம்பிளான பிளான் என்னிடம் உண்டு.

அதாவது,உலகில் உள்ள பத்தாயிரம் கோடி பேரை தெரிவு செய்து அவர்கள் ஒவ்வொரு வரிடமும் ஒரு டொலர் விகிதம் வாங்கினால், பத்தாயிரம் கோடி பேரிடம் வாங்க பத்தாயிரம் கோடி அமெரிக்க டொலர் கிடைத்து விடும்.

இந்த ஐடியாவுக்கு அதில் ஐம்பது பேசன்டேஜ் ஐயாவுக்கு (வியாசருக்கு) கொடுத்து விடுங்களேன்.




நல்லதைப் பாராட்டும் எண்ணம் எம்மிடம் இவ்வாறு போய்விட்டதே வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**பொதுவேட்பாளர் பயனற்றது என்கிறாரே சம்பந்தன்?**

ஓ... அப்படியா? அப்படியென்றால் பயன் யாருக்கு?

தீர்வு பொங்கலுக்கு வரும்... புது வருடத்திற்கு வரும் என்று அறிக்கையிடும் போது இவ்வாறான சிந்தனைகள் வராதது ஏன்,யுவர் ஆனர்.

**ஸ்ரீபன் — மானிப்பாய்**

**உதைபந்தாட்டத்தில் ரொனால்டோ, மெஸ்ஸி இருவரில் யார் சிறந்த வீரர் வியாசரே?**

உதைபந்தாட்டத்தில் மரடோனாவிற்குப் பின்னர் ரொனால்டோ, மெஸ்ஸி ஆகிய இருவரும் இரு பெரும் தசாப்தங்கள் என்பதை நாம் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்.

அந்தளவிற்கு இருவரின் உழைப்பும் மைதானத்தில் நூறு விகிதம் இருக்கவே செய்யும்.

இருவரும் வாழ்வின் அடி மட்டத்தில் இருந்து திறமையை மட்டும் காட்டி உச்சம் தொட்டவர்கள்.

ரொனால்டோ இன்றுவரை உடலில் பச்சை குற்றியதில்லை. அதற்கு அவர் கூறிய காரணம், உடலில் பச்சை குத்தினால் பச்சை குற்றி ஆறு மாதங்களுக்கு குருதிக் கொடை மேற் கொள்ள முடியாது. ஆதலால் நான் ஒரு நாளும் உடலில் பச்சை குற்றிக் கொள்ள வில்லை என்று.

இதில் ரொனால்டோ ஒரு படி உயர்ந்தே நிற்கின்றார்.

**ஜெகமோகன் — கொக்குவில்**

**உலகக் கிண்ண T-20 போட்டிகளில் நெத்தலிகள் சுறாக்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றனரே?**

என்னதான் கடலின் ராஜா சுறாவாக இருந்தாலும் நெத்தலிகள் சுறாவின் வாய்க்குள் சிக்குவது கடினம்.

அமெரிக்காவின் 11 பேர் கொண்ட அணியில் 2 பேர் மட்டுமே அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்ற விமர்சனம் இருக்கிறது.

அமெரிக்காவுக்கு தனது நாடு வெற்றி பெற வேண்டும்.

அதற்காய் எத்தனை நெத்தலிகளையும் சுறாக்களுடன் போரிடப் பணிக்கும். பழக்கும்.

எதிர்கால கிரிக்கெட்டில் அமெரிக்கா ஆதிக்கம் தொடரும் என்பது தெளிவு.

**விஜயதரன் — உரும்பிராய்**

**மோடி இந்தியப் பிரதமராக 3 ஆவது முறை பதவியேற்பதால் ஈழத் தமிழ் மக்களுக்கு ஏதும் நன்மையுண்டா வியாசரே?**

ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கு நீதியைப் பெற்றுத் தர இனி எவராலும் முடியாது. அதற்குரிய காலம் கடந்து விட்டது.

மோடியின் ஆட்சியில் தமிழினத்திற்கு நன்மை உண்டா என்பதை விடுத்து காங்கிரஸ் அரசு வென்றிருந்தால் எப்படி இருக்கும் என சிந்தித்துப் பாருங்கள்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினம் இலட்சக் கணக்கில் அழியும் போது புலிகள் அழிய வேண்டும் என்ற கொடூர குணத்துடன் மௌனம் காத்தவர்கள் இவர்கள்.இப்போது புரிகிறதா விஜயதரன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக நீண்ட காலம் சேவையாற்றி ஒய்வு பெற்ற இ.மா.சிவசுப்பிரமணியம் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.


மிகச் சிறந்த தமிழ் ஆசிரியரான அவர் தமிழியலில் சிறந்த அறிவாற்றலைக் கொண்டிருந்தவர்.

வேலணை சரவணையைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு நிலை ஆசிரியர் சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மீண்டும் எழுந்த பண்டிதர் பரமலிங்கம், பளை- மாசார் பிரதேசத்தில் சுதேச வைத்தியராக இருந்து அந்த மக்களுக்கு மிகச் சிறந்த சேவையாற்றிய வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அவர்கள் காலமாகி விட்டார். எங்கள் தமிழர் பண்பாட்டில் சுதேச வைத்தியம் எங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் காத்திரமான பங்கை ஆற்றியிருக்கிறது. அந்த வகையில் சுதேச வைத்தியராக இருந்து சேவையாற்றிய சுப்பிரமணியம் அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி



வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்



மார்க்கண்டு சிவசுப்பிரமணியம்

செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி. இப்ப இலங்கையில இந்து சமயம் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது.

**சாத்திரியார்:-** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:-** அண்மையில யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியில அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கில பொது வேட்பாளர் தொடர்பில ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது.

அதில முதல் நிகழ்வாக மங்கள விளக்கேற்றல் இடம் பெற்றது. அந்த மங்கள விளக்கேற்றலின் போது கத்தோலிக்க மத குருவை முதலாவதாக அழைத்து மங்கள விளக்கேற்றப்பட்டதுடன் அங்கு பிரசன்னமாகியிருந்த சிவாச்சாரியாரை இரண்டாவதாக அழைத்து மங்கள விளக்கேற்றினர்.

இதனால் அந்தக் கருத்தரங்கில பங்குபற்றின சனங்களிடையே சிறு சலசலப்பு ஏற்பட்டது.

பொதுவில, தமிழர் பகுதியில நடக்கிற நிகழ்வுகளில சைவசமய மத குருவை முதலாவதாகவும் கத்தோலிக்க மதகுருவை இரண்டாவதாகவும் அழைத்து மங்கள விளக்கேற்றுவது தான் வழக்கம்.

ஆனால் அறிவோர் ஒன்று கூடும் அரசியல் கருத்துக் களம் நடத்திய கருத்தரங்கில, ஏன் சைவக் குருவை இரண்டாவதாகப் பின் தள்ளினர் என்பது தான் புரியாமல் உள்ளது.

**வாத்தியார்:-** சரி... சரி... இனிமேலாவது இந்த விடயங்களைக் கவனத்தில கொள்ள வேணும்.

**விதானையார்:-** வாத்தியார் நீங்கள் சொல்லுறது சரிதான். ஆனால் குறித்த கருத்தரங்கிற்கு எங்கட சைவக்குரு போயிருக்கக் கூடாது எண்டு ஏனைய சிவாச்சாரியார்கள் குறை சொல்லியிருக்கினமாம்.

**சிறாப்பர்:-** அது சரிதான். கடந்த சில நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திற்கு வந்த சஜித் பிறேமதாச யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்திற்குச் சென்று ஆயரைச் சந்தித்தவர்.

ஆனால் நல்லை ஆதீனத்திற்கு அவர் போகவில்லை. முன்பு ஒரு முறை யாழ்ப் பாணம் வந்த போது, நல்லை ஆதீனத்திற்கு சஜித் பிறேமதாச போனாராயினும் இம் முறை அவர் நல்லை ஆதீனத்திற்கு போகாதது சைவ சமயத் தலைவர்கள் மத்தியில சலசலப்பை ஏற்படுத்தியிருக்குது.

**மூப்பர்:-** இந்த விவகாரங்கள் இஞ்ச இருக்கிற சஜித்தின்ர சின்னுகள் செய்யிற கூத்துக்கள் தானே!

**சிறாப்பர்:-** மூப்பர் அப்படிச் சொல்ல முடியாது.சஜித்துக்கும் ஒரு சிந்தனை வேணும் தானே.

யாழ்ப்பாணத்தில ஆயரைச் சந்திப்பது கத்தோலிக்க மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வது போல, நல்லை ஆதீன சுவாமிகளைச் சந்திப்பது சைவ மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாக அமையும்.

இதுபற்றி ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு விளங்காவிட்டால், பிறகு என்ன செய்யிறது.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.


**வாத்தியார்:-** அது சரி, பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்ற ஒரு பெண்ணாசிரியரின் நியமனத்தை வடக்கு மாகாணம் மீளப் பெற்றதாக அறிஞ்சன் என்ன சங்கதி.

**சாத்திரியார்:-** நியமனத்தை மீளப் பெறுவதென்பது சம்பந்தப்பட்டவருக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதேநேரம் நியமனத்தை மீளப் பெறுகின்ற அளவுக்கு நிலைமை இருக்கிறதென்றால், அந்த நியமனத்தை பெற்ற ஆசிரியரின்ர பக்கத்தில தவறு இருக்க வேணும்.

அதை விட்டிட்டு அரச அதிகாரிகள் விட்ட தவறுக்காக கொடுத்த நியமனத்தை மீளப் பெறுவதென்பது மனித உரிமை மீறல் எண்டு தான் கருத வேண்டும்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அந் நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## வழங்கிய ஆசிரியர் நியமனத்தை மீளப்பெற்றமை நியாயமானதா?

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




ஒரு சிறு பொருளைக் கூடச் சரணடைந்தவர்கள் தம்முடன் எடுத்துச் செல்ல ஒல்லாந்தர் அனுமதிக்க வில்லை.

சரணடைந்த போர்த்துக்கேய வீரர்களைக் கப்பல்களில் ஏற்றிக் கோவாவிற்கும் பத்தேயாவிற்கும் அனுப்பி வைத்தான்.

தண்டிக்கப்பட வேண்டிய இராணுவ அதிகாரிகளை நார்டென் கப்பலில் ஏற்றிக் கைதிகளாக ஒல்லாந்த வைஸ்ரோயின் விசாரணைக்காகச் பத்தேவியாவிற்கு அனுப்பி வைத்தனர்

குடும்பமாக இருந்த போர்த்துக்கேய வீரர்கள் அவர்களது இந்தியாக் குடியேற்றமான கோவாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். போர்த்துக்கேய கன்னிகளையும், விதவைகளையும் ஒல்லாந்தர் தம்முடன் தடுத்து வைத்துக் கொண்டனர்.

போர்த்துக்கேயப்படையில் வேலை செய்த பலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாக இருக்க ஒத்துக்கொண்டனர். மலபார் வீரர்களில் பழகும் பழங்களில் சிலரும் அவ்வாறு சேவையில் தொடர்ந்திருக்க ஒப்புதல் வழங்கினர்.

யாழ்ப்பாணக் கோட்டையின் வீழச்சியுடன் போர்த்துக்கேயரின் சாம்ராச்சியம் இலங்கையில் அஸ்தமித்தது. கோட்டையின் வீழ்ச்சிகளுக்குப் பல காரணங்களிருந்தன.

கொமுசாறி வன் ஹூன்சின் முற்றுகை மார்ச் 16ஆம் திகதியிலிருந்து ஜூன் 21ஆம் திகதி வரை நீடித்ததால், கோட்டைக்குள் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடும் பரவிய நோய்களும் அவர்களைச் சரணடையத் தூண்டின.

இலங்கையின் ஏனைய பகுதிகள் எல்லாவற்றிலும் கோட்டைகளை இழந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையை மட்டும் தம்வசம் வைத்திருப்பதில் பயனில்லை என்ற உணர்வு. தரை மார்க்கமாகவும் கடல் மார்க்கமாவும் ஒரே வேளையில் ஒல்லாந்தப்படை தாக்குமென அவர்கள் எதிர்பார்க்கவில்லை. நீண்ட கால முற்றுகையின் பின்னர் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதலால் கொத்தளங்கள் சிதைந்தன. கோட்டைமதில்கள் தகர்ந்து போயின.

துப்பாக்கி மருந்துக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் தட்டுப்பாடேற்பட்டது. உணவில்லாமையினால் இறந்தவர்களை விட ஒல்லாந்தரின் பயங்கரமான எறிபொறிகள் ஈவிரக்கமின்றி வீசிய கற்களுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இவை யாவும் போர்த்துக் கேயரைச் சரணடைய வைத்தன.

யாழ்ப்பாணக் கோட்டை பிடிபட்டதும் ஒல்லாந்தத் தளபதி பத்தேலியாவிலுள்ள வைஸ் ரோயிக்குப் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்தான். (தொடரும்)

---

# கடல் புறா




கதவுகளைப் போலவே கோட்டைச் சுவர்களும் பலமாயிருந்தன. சுவர்களின் தளம் சுமார் நான்கடி அகலத்தில் அமைக்கப்பட்டு நகரத்தைச் சுற்றி ஒட்டிக் கொண்டிருந்தது. அந்த நான்கடி அகலச் சுவர்களின் பகுதிகள் சில ஆங்காங்கு இரண்டடி முன் தள்ளப்பட்டு அவற்றில் தூரப்பார்வைக் கூடங்கள் அறைகளைப் போல் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து சதா கண்காணித்து வந்த காவலரின் பார்வையிலிருந்து சுற்றும் காத தூரத்துக்குள் வரும் எதுவும் தப்ப முடியாதென்பதை அறிந்த இளையபல்லவன், அந்தக் கோட்டையமைப்பு பாரத நாட்டின் கோட்டைகளின் அமைப்பு போலவே இருந்ததைக் கவனித்து, "பாரதத்தின் நாகரிகம் நாட்டியத்தில் மட்டுமல்ல, போர்த் துறைகளிலும் சொர்ண பூமியில் பரவியிருக்கிறது. பாரதம் வழி காட்டாவிட்டால் இந்த நாட்டின் கதி என்ன?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு அந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டதில் ஓரளவு திருப்தியும் அடைந்தான். இத்தனை ஏற்பாட்டிலும் ஒரு முக்கிய வித்தியாசமிருந்ததையும் கண்ட இளைய பல்லவன், அதற்குக் காரணம் என்னவென்பதை மட்டும் அறியாமல் திணறினான். கோட்டைக்கு மூன்றே வாயில்கள் இருந்தன. அந்த மூன்று வாயில்களில் ஒன்று கூட மலைப்பக்கம் இல்லை. காடு அடர்த்தியாயிருந்த பகுதியில் வாயிலும் இல்லை, காவலும் அதிகம் இல்லை. காட்டில் வாழும் பூர்வ குடிகளைக் கண்டு நகர மக்கள் நடுங்கிக் கொண்டிருக்க அந்தப் பூர்வகுடிகள் வரும் அந்த வழியில் கூர்மையான ஆணிகள் உள்ள பெரும் கதவுகளுள்ள வாயிலையும், தளத்தில் பலமான காவலையும் வைப்பது நியாயமாயிருக்க, அந்தப் பகுதியை ஏன் பரம பலவீனமாக வைத் திருக்கிறான் பலவர்மன் என்பதை எண்ணிப் பார்த்தும் விடை கிடைக்கவில்லை இளைய பல்லவனுக்கு. இருப்பினும் பலவர்மன் செய்த தவறைத் தான் செய்யாமல் அந்த விடயத்தில் பலமான காவலையும் அமைக்கத் தீர்மானித்தான் இளையபல்லவன்.

இப்படி நகரம் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு அன்று மாலை அவன் கோட்டைத்தலைவன் மாளிகைக்குத் திரும்புவதற்குள் மேல் தள அறையில் அவனுக்கு வேண்டிய சகல வசதிகளையும் அவனது மாலுமிகள் செய்து முடித்திருந்தார்கள். இளையபல்லவனின் ரசிகத் தன்மையை உணர்ந்திருந்த கூல வாணிகன் சேந்தன் பெரும் மன்னனின் சயன அறைபோல் அதை அலங்கரிக்க மாலுமிகளுக்கு உத்தரவிடவே இளையபல்லவன் மரக்கல அறையிலிருந்தே மஞ்சம் முதற்கொண்டு சகல வசதிகளும் அந்த அறைக்குக் கொண்டு வரப்பட்டன. அப்படி வசதி செய்யப்பட்ட அந்த அறையில் அன்றிரவு இளைய பல்லவன் தன் உப தலைவர்களனைவரையும் வர வழைத்துச் செய்ய

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?

வேண்டிய ஏற்பாடுகளை விவரித்து. அதற்கான உத்தரவுகளையும் பிறப்பித்தான். தனது மரக்கலத்தைக் கயிறுகள் கட்டித் தரைக்கு இழுத்துச் செப்பனிடும் வேலையைத் துவங்கும்படி கண்டியத்தேவனுக்குக் கட்டளையிட்ட இளையபல்லவன், "தேவரே! மரக்கலத்தின் அமைப்பிலும் சிறிது மாறுதல் தேவையிருக்கிறது. மரக்கலத்தைத் தரையில் இழுத்து அடிப்பகுதியைப் பழுது பார்த்த பிறகு என்னிடம் சொல்லும். மாறுதல் எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்கிறேன்," என்று கூறினான். "இப்பொழுதிருக்கும் அமைப்புக்கு என்ன என்று கேட்டான் கண்டியத்தேவன். "போர் வசதி போதாது," என்று விடையளித்தான் இளைய பல்லவன்.

"அகூதா அளித்த மரக்கலம்," என்று முணுமுணுத் தான் கண்டியத்தேவன்.

"ஆம் பல போர்களைக் கண்டிருக்கிறது."

"ஆம் இதைவிடச் சிறப்பாக எப்படி அமைப்பது ஒருபோர்க் கலத்தை?" இந்தக் கேள்விக்கு இளையபல்லன் பதிலேதும் சொல்லவில்லை.

"பிறகு சொல்கிறேன் தேவரே?" என்று சட்டென்று வார்த்தையை முடித்துவிட்டுக் கோட்டையின் பாதுகாப்புக்கான உத்தரவுகளை இடுவதில் முனைந்தான். தனது உப தலைவர்களில் இருவரைக் கிழக்கு வாயிலையும், இருவரை மேற்கு வாயிலையும் காக்க உத்தரவிட்டான். மற்றும் இருவருக்கு நகர மக்களில் போருக்குத் தகுதியுள்ளவர்களாகப் பொறுக்கிப் பாதுகாப்பு முறைகளில் பயிற்சியளிக்க உத்தரவிட்டான். கடைசியாக அமீரை நோக்கி, "அமீர்! இந்த நகரத்தின் அபாயமான பகுதியைக் காக்கும் பொறுப்பை உன்னிடம் அளிக்கப் போகிறேன். அந்த இடத்தைக் காப்பதில் உன் உயிருக்கு ஆபத்துத்தான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

ஏமாற்றங்களுக்கு
எல்லையில்லை
வரைவிலக்கணம்
வகுத்ததோ
நாமிருக்கும் நாடு
தலைமைகளும்
தலையாட்டி
பொம்மைகளாய்
நல்லிணக்கம் மறந்த
நாயகர்களாய்
காவியணிந்த
போதி மதப் புனிதரின்
நாளை மலரும்
நமதுரிமையென
வாக்கு வங்கியில் வரம் கேட்டோர்
மன்றேரி வாழ
எதிர்பார்ப்புகளில்
ஏமாறும் நாங்கள் இன்னும்

தமிழினியன், வவுனியா.

## அன்பு மகளே!



எங்கும் பறந்து திரி
என் கிளையில் உன் கூடு
உன் இளைப்பாறுதல் நிமித்தம்..

என் கனவுகளால் வனையப்பட்டு
அன்பெனப் பெயர் சூட்டப்பட்ட
சுயநலக் கூடல்ல இது
உன் சுதந்திரக் காடு..

துரோகங்கள் வஞ்சனைகள்
சூழ்ச்சிகள் காமங்களின்
முட்கள் உன் சிறகுகளை
கிழிக்கக் கூடும்
விலகிப் பற
எல்லையற்றது வானம்..

சூழ்ச்சியென சில அலைகள்
சூழ்ந்து கொள்ளலாம்
சிக்கிக்கொள்ளாதே
எதிர்நீச்சல் அடி..

மூர்க்க வெக்கையின்
படபடப்போடு சில விரல்கள்
உன் சிறகுகளை
வருடிக்கொடுத்தே
பொசுக்க நினைக்கலாம்,
உயிர்ப்போடிரு..

சில பரிவின் மொழிதலில்
சுயதேவைகள் பொதிந்திருக்கும்
உனக்காக வாழப்பழகு
உன்னைத் தியாகியாக்காதே

சிலர் காட்டும் கருணையில்
மூழ்கடிக்கச் சுழி இருக்கும்
விழிப்போடிரு..

உன்னை நீ அறிந்து கொள்
உன் புரிதல்கள் தான்
பட்டறிவைக் கற்றுத்தரும்
கற்றுக்கொள்... பக்குவம் அறி...

உனக்கான கனவுகளை எடுத்துப்படி...
நிதானம் கொள்.. உன் கூண்டில்
கொஞ்சம் இளைப்பாறு..
மீண்டும் எழுந்து பற..


உன் கூடு திறந்து கிடக்கிறது
தாயன்பு நிறைந்து கிடக்கிறது
எப்போதும் உலரா ஈர முத்தங்கள்
உனக்கென்றே கிடக்கின்றன..

என்னில் நீ
உன்னில் நான்
நான் மறுத்து நீ
நீ மறுத்து நான்
சமன் செய் உன்னை..

உனக்கு நான்தான் சுதந்திரக்காடு
எனக்கு நீதான்டி உயிர்க் குருவி

சங்கரி சிவகணேசன்

## மௌனத்தின் தேடல்- 720



### குருவான குழந்தை

அறுதல் சொல்வதற்கு
வயது ஒரு தடை அல்ல
அன்பு இருந்தாலே போதுமென்று
பாரிற்கு அறிவிக்கிறான்
இந்தப் பால் மணம்
மாறாப் பாலகன்

துணவியூர் நடா

### அர்த்தம் என்ன?

பார்க்கும் உனது விழிகள்
கூறும் அர்த்தம் என்ன?
பாசமா? பரிதாபமா?
தீண்டும் உனது விரல்கள்
கூறும் அர்த்தம் என்ன?
அன்பா? அரவணைப்பா?
கூறிவிடு குழந்தாய்
ஆவலாக உள்ளேன் உனது பதிலுக்காய்

ஜெனிக்கிளாஸ் ஜெறிஸ்,
யா/ஊர்காவற்றுறை
றோ.க.த ஆண்கள் பாடசாலை

### வரலாறும் மறக்காது

மழை நீரை விடவும் தாய்
மாரின் கண்ணீரதிகம்
துயரைப் போக்குவோமென்று
உயர் பதவிக்கு வந்தவர்கள்
அதிகாரத்தை அதி காரமாக்கி
வதிவிடத்தை விலக வைத்து
அழவைத்து அலைய விட்டதை
வாழ்நாளில் மறக்க முடியாது
வரலாறுமிதை மன்னிக்காது
வாஞ்சையுடன் கண்ணீரை-
துடைக்கும்
பிஞ்சு மனக் குழந்தைக்குக் கூட
விஞ்சும் கொடுமை புரிகின்றது

க.நாகராசா, நுணாவில்.

### மீட்பு

தாயின் மன வருத்தத்தை
சேய் உணர்ந்து
வாய் பேச முடியாத
மெய் நிகழ்வுகள் மனக்காட்சியில்
பொய் நிகழ்வுகள் இருளில்
தொய்விடாத சமுதாயம், தேசம்
என ஆற்றுப்படுத்தும் காட்சி!

சி.சுகிர்தமலர்,
உரும்பிராய்.

## மௌனத்தின் தேடல்- 721



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

ஈனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

### குட்டிச் சுட்டி

முத்துக்கு முத்தான சொத்துக்குச் சொத்தான செல்ல மகன்
தன் தாயின் விழித் தூசுதனை தன் செப்பு வாய் குவித்து
ஊதி தளிர்க்கரங்களால் பாசமுடன் மெல்லத் தடவி விடும்
இவன் ஒரு அதி பாசக்காரக் குட்டிச் சுட்டி தான்

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

### அன்னையின் விழி எங்கே?

அன்னையின் விழியைத் தேடிப் பார்க்கும் தம்பி!
ஆன்னை விழியை இழக்கவில்லை.
உன் விரல்கள் பட்டதும் விழித்துக் கொள்வாள்.
பாவிகளின் சதியால் பார்வை இழந்தாளோ – மகனே
கலங்காதே! நீ தான் அம்மாவின் விழிகள் – வழி நடந்து
விதி மாறும் – வருங்காலம் உன் கரங்களில்.

அபி குலமாலிகா, சித்தன்கேனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: பார்த்தால் பசி தீரும்
இயற்றியவர்: கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்: ரி.எம்.சௌந்தர்ராஜன்



பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்
பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்
நீ ஒருவனை நம்பி வந்தாயோ ?
இல்லை இறைவனை நம்பி வந்தாயோ ?
நீ ஒருவனை நம்பி வந்தாயோ?
இல்லை இறைவனை நம்பி வந்தாயோ ?

பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்

தாயாரைத் தந்தை மறந்தாலும்
தந்தை தானென்று சொல்லாத போதும்
தாயாரைத் தந்தை மறந்தாலும்
தந்தை தானென்று சொல்லாத போதும்
தானென்று சொல்லாத போதும்
ஏனென்று கேட்காமல் வருவான்
நம் எல்லோருக்கும்
தந்தை இறைவன் இறைவன்

பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்

உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம்
அது இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
உள்ளோர்க்கு செல்வங்கள் சொந்தம்
அது இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
இல்லார்க்கு உள்ளங்கள் சொந்தம்
இல்லாத இடம் தேடி வருவான்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன் இறைவன்

பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்
நீ ஒருவனை நம்பி வந்தாயோ ?
இல்லை இறைவனை நம்பி வந்தாயோ ?

பிள்ளைக்குத் தந்தை ஒருவன்
நம் எல்லோருக்கும் தந்தை இறைவன்

# அநீதியான போர்

**“ஹமாஸின் தாக்குதல் மிருகத்தனமானது என்றால், பதிலடி எனும் பெயரில் இஸ்ரேல் அன்று தொடங்கி இன்றுவரை நடத்திவரும் போர், கொடூரத்திலும் கொடூரமானதாக இருக்கிறது.**



என்னுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டது. நான் துன்புறுத்தப்படுகிறேன். சொந்த வீட்டில் கூடப் பாதுகாப்பாக இருக்க முடியவில்லை. படுக்கையறைக்குள் கூட அவர்கள் புகுந்துவிடுகிறார்கள் என்று நடுங்குகிறார் நதேராஷல் ஹெறாப் கெவோர்கியன். இஸ்ரேலில் பணிபுரியும் 64 வயது பாலஸ்தீனப் பேராசிரியர் இவர்.

இஸ்ரேல் நடத்திக்கொண்டிருப்பது அநீதி யான போர் என்று கருதியதும், அதை வெளிப்படுத்தியதும்தான் இவர் இழைத்த குற்றம். ஹீப்ரு பல்கலைக்கழகத்தில் கடந்த 30 ஆண்டுகளாக வகுப்புகள் எடுத்துவரும் நதேரா, கடந்த மார்ச் மாதம் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டார். அடுத்த மாதம் அவரைப் பிடித்து இழுத்து வந்து சிறையில் அடைத்தார்கள். பயங்கரவாதத்தைத் தூண்டிவிடுகிறார் எனும் குற்றச்சாட்டின் பேரில் தற்சமயம் அவர்மீது வழக்கு நடைபெற்று வருகிறது.

இத்தனைக்கும் நதேரா இஸ்ரேலில் பிறந்து, வளர்ந்து, படித்து, பணியில் அமர்ந்து, புகழ் பெற்றவர். வன்முறை, இனவொழிப்பு, அரசுக் குற்றங்கள், நீதி ஆகியவைதான் இவருடைய ஆய்வுக்களங்கள். உலகெங்கும் பல்கலைக் கழகங்கள் இவரை வரவேற்று உரை நிகழ்த்தச் சொல்லியிருக்கின்றன. அமெரிக்கா தொடங்கி பல நாடுகளில் வருகைதரு பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். கல்விப்புலம் சார்ந்தோரால் மதிக்கப்படும் ஓர் ஆளுமையாக இருக்கிறார். எனவே, அவர் மீதான நடவடிக்கை உலகெல்லாம் பேசுபொருளாகியிருக்கிறது. மற்றபடி, வெளியில் அறியப்படாத ஆயிரக்கணக்கான பேர் மீது இதே போன்ற அல்லது இதைக் காட்டிலும் தீவிரமான தாக்குதல்களை இஸ்ரேல் அரசு சத்தமின்றி நடத்திவருகிறது. அராபியர்களும் பாலஸ்தீனர்களும் மட்டுமல்ல, அரசின் குற்றங்களைக் கேள்விக்கு உட்படுத்தும் இஸ்ரேலியர்களும் கூட இதே வகையான ஒடுக்கு முறையைத்தான் எதிர்கொண்டு வருகிறார்கள்.

### "ரத்தக்கடலை அன்று கண்டேன்!"

'காசாவில் பெண்கள், குழந்தைகள், மருத்துவர்கள் என்று தொடங்கி, ஒவ்வொருவரும் கொடூரமான வதைகளை அனுபவித்து வருகிறார்கள். அவர்களோடு ஒப்பிட்டால் எனக்கு நடந்துவருவது ஒன்றுமே இல்லை' என்கிறார் நதேரா. 'நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவர்களுடைய துயரை. அவர்களுடைய வாதைகளை. அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை' கடந்த எட்டு மாதங்களாக இஸ்ரேல் நடத்திவருவது பாலஸ்தீனத்துக்கு எதிரான போர் என்று நாம் நினைத்தால் அது தவறு. நீதி, ஜனநாயகம், மனிதம், தனிநபர் சுதந்திரம், கருத்துரிமை, பத்திரிகைச் சுதந்திரம் உள்ளிட்ட விழுமியங்களின் மீதுதான் இஸ்ரேல் போர் தொடுத்துவருகிறது.

இஸ்ரேல் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதற்கான ஒரு சோறு பதம் நுஸைராத் அகதி முகாம் சம்பவம். தொடர் அழிவிலிருந்து எப்படியோ தப்பிப்பிழைத்து, குழந்தை, குட்டி, மூட்டை முடிச்சுகளோடு நூற்றுக்கணக்கான பாலஸ்தீன அகதிகள் இந்த முகாமில் ஒண்டிக் கொண்டிருந்தனர். சில தினங்களுக்கு முன்பு, எதிர்பாராத ஒரு கணத்தில் வான் வழியாகவும், தரை வழியாகவும், கடல் வழியாகவும் ஒரே நேரத்தில் மிகக் கொடூரமான ஒரு தாக்குதலை நடத்தியது இஸ்ரேல்.

அலறலும் புழுதியும் அடங்கிய பிறகு பார்த்ததில், 274 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருந்தனர். பெண்கள், குழந்தைகள், முதியோர், காயமடைந்தோர் அனைவரும் இதில் அடக்கம். ஏற்கெனவே நடைப்பிணமாக இருந்தவர்களைத் தேடிப்பிடித்து இன்னொரு முறை கொன்றிருக்கிறது இஸ்ரேல். "பெருகியோடும் ரத்தக்கடலை அன்று கண்டேன்" என்கிறார் அல் அக்சா மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் ஒருவர்.

### காசா ஒரு சுடுகாடாக மாறிவிட்டது!

ஹமாஸின் தாக்குதல் மிருகத்தனமானது என்றால், பதிலடி எனும் பெயரில் இஸ்ரேல் அன்று தொடங்கி இன்றுவரை நடத்திவரும் போர், கொடூரத்திலும் கொடூரமானதாக இருக்கிறது. மக்கள் குடியிருப்பு, வீதி, சந்தை, அகதி முகாம், பள்ளிக்கூடம், மருத்துவமனை என்று எந்த பேதமும் பார்க்காமல், மனசாட்சியே இன்றி காட்டுத்தனமாகக் குண்டுகள் வீசி பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் இதுவரை கொன்றொழித்திருக்கிறது.

ஹமாஸின் குற்றத்துக்கு அப்பாவி பாலஸ்தீனர்கள் கொத்துக் கொத்தாக பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இதுவரை நடைபெற்ற எந்தப் போரிலும் இல்லாத அளவுக்கு அதிர்ச்சியூட்டும் எண்ணிக்கையில் குழந்தைகளும் பெண்களும் கொல்லப்பட்டிருக்கின்றனர்.காசா ஒரு சுடுகாடாக மாறி நீண்டகாலம் ஆகிவிட்டது.

### இஸ்ரேல் நடத்திவருவது இனவொழிப்பு!

தந்திரமான, கடினமான தலைவர் என்று தன்னைத் தொடர்ந்து முன்னிறுத்திவரும் பெஞ்சமின் நெதன்யாகு, தன் வாழ்வின் மிகப் பெரும் தோல்வியை ஹமாஸ் தாக்குதலின் மூலம் சந்தித்திருக்கிறார். அவருடைய பெயரும் பிம்பமும் கிடுகிடுவென்று சரிந்துகிடக்கின்றன. ராணுவத் தலைமை தொடங்கி அரசியல் உள்வட்டம் வரை, பலர் அவர் மீது அதிருப்தியோடு இருக்கின்றனர். 'இனியும் அவரோடு ஒட்டிக் கொண்டிருப்பது நம் எதிர்காலத்துக்கு நல்லதல்ல' என்று நினைப்பவர்கள் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். அவரிடமிருந்து விலகவும் தொடங்கியிருக்கிறார்கள்.

'பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண், ரத்தத்துக்கு ரத்தம்' என்னும் முழக்கம் எப்போது முறியடிக்கப்படுகிறதோ, அப்போதுதான் இந்தப் போர் முடிவுறும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

404

வலம்புரியின் மருத்துவச்சுடர்


## ஆரோக்கிய உணவு அனைவருக்கும் பொதுவானது...

நாம் இன்று உண்ணும் உணவு மேலைத்தேசமோகம் , நேரமின்மை, காரணமாக நாம் இன்று ஆரோக்கியமற்ற உணவு வகைகளை உண்கின்றோம். விரைவாகத் தயாரிக்கப்படக் கூடிய , சுவையான, இலகுவில் சமிபாடடையக் கூடிய நூடில்ஸ் போன்ற உணவுகளை நாடுகிறோம். இதனால் உடலுக்கு தேவையான புரதங்கள், கனிப்பொருட்கள், விற்றமின்கள் கிடைக்காமல் போவதுடன் மேலதிக கலோரிகளால் உடற்பருமன் அதிகரிப்பதுடன் நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நாம் இன்று விரும்பி உண்ணும் உணவுகளில் அதிக சீனி, உப்பு, நிரம்பிய கொழுப்புக்கள், அதிக மாப்பொருள் என்பன அளவுக்கு அதிகமாக உள்ளன. இவை சுவையாக இருக்கின்ற போதிலும் உடலிற்குத் தீங்கானவை ஆரோக்கிய உணவு புரதம், நிரம்பாத கொழுப்புக்கள், சிக்கலான காபோவ்வதரேற்றுக்கள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நிறைந்த பூரண உணவு வகைகளே ஆரோக்கிய உணவாகும். ஆரோக்கிய உணவு என்பது வயது, பால், வேறுபாடு இன்றி அனைவருக்கும் பொதுவானது. நாம் சிறுவயது முதல் ஆரோக்கிய உணவு உண்ணப்பழக வேண்டும்.

உடலிற்கு ஆரோக்கியம் அளிக்கும் பழவகைகள் நமது உணவில் அதிகளவு பழங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும். பழங்கள் எமக்கு விற்றமின் சி, விற்றமின் ஏ போன்ற அத்தியாவசியமான விற்றமின்களை வழங்குகின்றன. பழங்களில் அதிகமுள்ள பொட்டாசியம் குருதி அமுக்கத்தை குறைக்கின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் மாம்பழம், பலாப்பழம் போன்ற அதிக இனிப்புள்ள பழங்களை தவிர்ப்பது நல்லது. அவர்கள் வாழைப்பழம், பப்பாப்பழம், பச்சை அப்பிள், கொய்யா, நாவல், ஜம்பு போன்ற பழங்களை உண்ணலாம்.

பழங்களில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை தடுப்பதுடன் மூல நோய் , பெருங்குடற் புற்றுநோய் போன்றவை ஏற்படாமல் பாதுகாக்கின்றது. மரக்கறி வகைகளும் கீரைவகைகளும் பழங்களை போலவே மரக்கறி வகைகளும் கீரைவகைகளும் கனியுப்புக்களையும் விற்றமின்களையும் நார்ச்சத்தையும் தருகின்றன. இவற்றில் உள்ள காபோவைதரேற்றுக்கள் சிக்கலான நிலையில் இருப்பதால் (complex) இலகுவில் உறிஞ்சப்படுவதில்லை.



எனவே இரத்தத்தில் குளுக்கோசின் அளவு விரைவாக அதிகரிப்பதில்லை. இது நீரிழிவு நோயாளிகளுக்கு அதிக நன்மைதரும் கீரை வகைகளில் அதிக இரும்புச்சத்து உள்ளது. அது குருதிச் சோகை ஏற்படுவதை தடுக்கிறது. சைவ உணவு மட்டும் உண்பவர்கள் தமது உணவில் நாளாந்தம் பொன்னாங் காணி, வல்லாரை போன்ற கீரை வகைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### புரதச்சத்து அதிகமுள்ள பருப்பு, கடலை,அவரை வகைகள்

பருப்பு, பயறு, கடலை, கௌப்பி, சோயா, அவரை போன்றவை எமக்கு புரதச்சத்தையும் இரும்புச்சத்தையும் அளிக்கின்றன. இவற்றில் காபோவைதரேற்றுக்கள் குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு இவை சிறந்தவை. சோயா அவரையில் சிறந்த தர புரதம் உள்ளது. சிறுவர்களின் வளர்ச்சிக்கு புரத உணவுகள் அவசியமாகும்.

### தானிய வகைகள்

தானிய வகைகளை பொறுத்த வரையில் தீட்டாத முழுத்தானியங்களே சிறந்தவை. தீட்டாத அரிசியில் நார்ச்சத்தும், விற்றமின் B உம் அதிகமுள்ளன. ஆசியக் கண்டத்தை சேர்ந்த நாங்கள், அதிக மாச்சத்துள்ள சோறு மற்றும் அரிசிமா, கோதுமை மாப்பண்டங்களை அதிகளவில் உண்கிறோம்.

உடலை வருத்தி வேலை செய்யாதவர்களுக்கு இது தீங்கானது. எனவே நாம் மரக்கறிவகைகளை அதிகமாகவும் மாப்பொருள்களை குறைவாகவும் உண்ண வேண்டும். நாட்டரிசி, குத்தரிசி என்பன சம்பா அரிசி, பொன்னி அரிசி போன்ற வெள்ளை அரிசிகளை விடச் சிறந்தவை. மாவகைகளில் ஆட்டாமா, குரக்கன், உழுந்து என்பன சிறந்தவை. கோதுமை மாவில் அதிகளவு மாப்பொருள் இருப்பதால் தவிர்ப்பது நல்லது.

### எண்ணெய் வகைகள்

பொதுவாக எல்லோரும் எண்ணெய் வகைகளை குறைவாக எடுப்பது நல்லதாகும். நிரம்பிய கொழுப்பமிலங்கள் உள்ள தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் என்பன குருதியில் கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்கச் செய்வதனால் தீங்கானவை. நிரம்பாத கொழுப்பு அமிலங்களால் ஆன சூரிய காந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய், நல்லெண்ணெய், சோயா எண்ணெய், சோள எண்ணெய் போன்றவை சிறந்தவை ஆகும். மாஜரின் மற்றும் பிஸ்கட் வகைகளில் Transfattyacid எனப்படும் தீங்கான கொழுப்பமிலங்கள் உள்ளன என்பதால் அவை தவிர்க்கப்பட வேண்டியவை.

### நிறை உணவான பால்

பால் ஒருநிறை உணவு. அதில் கல்சியம், உயர்தரப் புரதம், விற்றமின்கள் நிறைந்துள்ளன. வளரும் பிள்ளைகளுக்கு பால் அத்தியாவசியம். பாலில் உள்ள பிரச்சினை அதில் உள்ள கொலஸ்ரோலும் நிரம்பிய கொழுப்புமாகும். எனவே வளர்ந்தவர்களும் கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்களும் பசுப்பாலையும் முழு ஆடை பால் மாக்களையும் தவிர்த்து கொழுப்பு நீக்கப்பட்ட பால்மாவை பயன்படுத்தலாம். மாமிசம் உண்ணாதவர்களுக்கு விற்றமின் பி12 பாலின் மூலம் மட்டுமே கிடைப்பதால் அவர்கள் பால் அருந்த வேண்டும்.

### மீனும் இறைச்சி வகைகளும்

மீன் எமக்கு தேவையான புரதம், கல்சியம், விற்றமின்கள் அயடீன் என்பவற்றை அளிக்கின்றது. மீனில் உள்ள கொழுப்பில் ஒமேகா – 3 எனும் கொழுப்பமிலம் உள்ளது. இது இருதய நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்கிறது. பெரிய மீன்கள் தீங்கானவை என்ற கருத்து நம்மிடையே உள்ளது.

இது தவறானது. இறைச்சி வகைகளில் கோழி இறைச்சி ஆரோக்கியமானதாகும். ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி என்பவற்றில் நிரம்பிய கொழுப்பமிலங்கள் கொலஸ்ரோல் என்பன அதிகம் உள்ளதால் தவிர்ப்பது நல்லது. Redmeat உள்ள மாடு, ஆடு என்பவற்றின் இறைச்சி புற்றுநோயை ஏற்படுத்தலாம்.

### முழு உணவான முட்டை

முட்டையிலும் உயர்தர புரதம், விற்றமின்கள் கனிப்பொருட்கள் நிரம்ப உள்ளன. ஆனால் முட்டையில் கொலஸ்ரோல் அதிகம் உண்டு. குருதியில் கொலஸ்ரோல் உள்ளவர்கள் முட்டை மஞ்சள் கருவை ஒரு வாரத்துக்கு 3 தடவைக்கு மேல் உண்ணக்கூடாது. முட்டை வெள்ளைக்கருவை அதிகமாக உண்ணலாம்

### உப்பை குறைப்பது நல்லது.

உணவில் உப்பை இயன்ற வரை குறையுங்கள். உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் அதிக உப்புள்ள சூப் வகைகள், கருவாடு என்பவற்றை குறைவாக உண்ண வேண்டும். சராசரியாக ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டி உப்பு போதுமானதாகும்.

### இனிப்பை தவிருங்கள்

எந்த வயதினராக இருந்தாலும் எல்லோருமே இனிப்பு வகைகளை குறைக்க வேண்டும். இனிப்புள்ள மென்பானங்கள், ஐஸ்கிறீம், இனிப்பு பிஸ்கட்டுகள் , கேக் என்பவற்றை தவிர்க்க வேண்டும். தாகமாக இருக்கும் போது மென்பானங்களை தவிர்த்து நீரை அருந்துங்கள். நீர் அத்தியாவசியம் ஒவ்வொரு நாளும் போதுமான அளவு நீரை அருந்துங்கள். வளர்ந்த ஒருவர் ஒருநாளைக்கு 2- 2 1/2 லீற்றர் கொதித்தாறிய நீரை பருக வேண்டும். இதன் மூலம் சிறுநீரகக்கற்கள், சிறுநீர் கிருமித்தொற்று என்பவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்

ஆரோக்கிய உணவு உண்பதன் மூலம் ஆரோக்கியமான வாழ்வை பெறுவதுடன் நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். நோய் வாய்ப்பட்ட பின்னர் உணவுக்கட்டுப்பட்டை கடைப்பிடிப்பதை விட வருமுன் காப்பதே சிறந்தது.


மருத்துவர்.எஸ்.கேதீஸ்வரன்
பொதுவைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## "புரிதலின்மைப் புரியவைப்போம்".



பைபிளின் மாற்கு நற்செய்தி 4:26-34 பகுதிகள் இன்று எமக்குத் தரப்படுகின்றது. இங்கு இயேசு கூறுகிறார் 'நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாட்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளர்கிறது. முதலில் தளிர், பின்பு கதிர், அதன்பின் கதிர் நிறையத் தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது". அறிவியல் ஓர் எல்லை வரை எட்டிச் சென்று, பயிர் வளர்வதற்கும், வளர்ந்த பயிர் விளைச்சலுக்கான காரணத்தை விளக்கலாம். அந்த எல்லைக்குப் பின், அறிவியலும் மௌனம் சாதித்து விடுகிறது. மனிதனின் கையை மீறிய ஒரு சக்தி அந்த பயிற்றுக்குள் இருந்து, நிலம் தானாக விளைச்சல் கொடுக்கச் செய்கிறது. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் தன் கையை மீறிய ஓர் ஆற்றல் நம்மை அறியாமல் நமக்குள்ளும் புறமும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது தான் இறை ஆட்சி. சில விசித்திரமான நிகழ்ச்சிகள் நம்மில் குறுக்கிடும் போது, ஆச்சரியமாக அந்த தெய்வீக சத்தி நம்மை பத்திரமாக பாதுகாத்த சம்பவங்கள் உண்டு என்பதை உணர வேண்டும். இன்னும் ஓர் உவமைக் கதையை இயேசு சொல்லுகிறார் இறையாட்சியை கடுகு விதைக்கு ஒப்பிடுதல். கடுகு விதை சிறிய வகை ஆனால் பாலஸ்தீனத்தில் கடுகுச் செடி நடுத்தர மரம் போலவே வளரும் தன்மையது. இதை இயேசு பின்னணியாகக் கொண்டு இறையாட்சி பற்றி விளக்குகிறார். இறையாட்சியின் தொடக்கம் சிறிதாக இருக்கலாம் ஆனால் அதன் வளர்ச்சியோ மிகப் பெரிதாக இருக்கும். சிறிய தொடக்கம் என்றாலும் எதிர்பார்ப்புகளை மிஞ்சிய வளர்ச்சியைப் பெற்று உயர்வது கடவுளின் ஆட்சி. இதிலிருந்து இயேசு இரு பாடங்களைப் புகட்டுகின்றார். முதலில், கடவுளாட்சியின் தொடக்கம் சிறிதாக இருக்கிறதே என நாம் நம்பிக்கை இழத்தல் கூடாது. ஏனென்றால் கடவுளின் திட்டத்தில் அவரது ஆட்சி ஒருநாள் மனிதர் அனைவரையும் உள்ளடக்குகின்ற பரந்த ஆட்சியாக மலர்ந்து விரியும். இரண்டாவது, கடவுளோடு மனிதர் ஒத்துழைப்பதால் கடவுளாட்சி வரும் என்பதால் சிறிய தொடக்கம் என்றாலும் தயக்கமின்றி நாம் செயற்பட வேண்டும் என்பதாகும். மரம்போல வளர்கின்ற கடுகுச் செடியில் பறவைகள் வந்து தங்கும் என இயேசு கூறுவது கடவுளாட்சியில் யாவருக்கும் இடம் உண்டு என்பதைக் காட்டுகிறது. பறவைகளுக்குப் பாதுகாப்பான இடம் ஒதுக்க இயற்கை மறப்பதில்லை. அது போல, கடவுளாட்சியில் எல்லா மக்களும் இடம்பெற வாய்ப்புண்டு என்னும் கருத்தை இயேசு நமக்குத் தருகின்றார். கடுகு விதை கிளைகள் உள்ள மரத்தை உண்டாக்கும். இதே போல் இறை அரசு அத்தனை வியப்புமிக்கது. இறை ஆற்றல் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தரும் வல்லமை கொண்டது. எத்தனை கிளைகள், வேர்கள், விழுதுகள் வெட்டப்பட்டும், இறையரசின் செயற்பாடுகளில் தயக்கமோ தடுமாற்றமோ இருப்பதில்லை. ஏனென்றால் செயற்படுவது இறைவன். அவரது ஆற்றலின் வெளிப்பாடுகள் அதிசயமானவை. எனவே கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை கடுகிலிருந்து மரமும் வளரும். கடவுளும் மனிதனாவார். கன்னியின் வயிற்றில் மனிதனாகவும் பிறப்பார். இங்கு அறிவியல் கடுமையாக குழம்புகின்றது. பைபிள் ஓர் அறிவியல் ஆராய்ச்சி புத்தகம் அல்ல. இறைவனைப் பற்றியும் மனித மீட்பும் பற்றிய வெளிப்படுத்துதல் அடங்கிய புத்தகம். புரிந்தவன் வாழ்வாக்குவான். வாழ்வு பெறுவான். நாமும் வாழ்வு பெறுவோம்.

ம.பிரான்சிஸ் -
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# இன்று ஒரு தகவல் 154



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## எடைக் குறைப்பு

ஒருவர் சேமிப்புப் பழக்கத்தில் மிகவும் கெட்டிக்காரர். பணத்தைச் சேமித்தார், பொருளை சேமித்தார், புகழைச் சேமித்தார் அதுவரைக்கும் சரி. அதே போல் உடம்பில் கொழுப்பையும் சேமிக்க ஆரம்பித்தார். உடம்பு மிகவும் பெருத்துப் போய்விட்டது. சேமிப்புப் பழக்கம் நல்லது என்று சொன்னால் அதற்கு இப்படியா?

சிலர் எப்படித் தெரியுமா? நல்ல குண்டாக இருப்பார்கள். "என்ன சார் கொஞ்சம் குறைக்கலாமே?" என்று கேட்டால் இது ஒன்றும் அதிகமில்லை சார் சாதாரணம் தான் என்று சொல்லுவார். அப்படி என்றால் இன்னமும் மேலே போகும் போல இருக்கிறது. உடம்பு பெருத்துக் கொண்டே சென்றால் அது உண்மையாகவே கவனிக்க வேண்டிய ஒரு விடயம். ஒருவருக்கு இப்போது இருக்கிற உடம்பு அளவு சரியாக இருக்கிறதா? பெருத்து இருக்கிறதா? என்று மருத்துவ ரீதியாக எப்படி கண்டுபிடிப்பது?

அதற்கு ஒரு சிறிய கணக்கு இருக்கிறது. நீங்களே போட்டுப் பார்க்கலாம். இதற்கு கல்குலேட்டர் எல்லாம் தேவையில்லை. வேறு ஒன்றும் இல்லை உங்கள் மார்பளவு, வயசு, உயரம் எல்லாவற்றையும் சேர்த்துக் கூட்டுங்கள். இதில் உங்கள் எடை சுமார் 10 சதவீதம் அதிகமாக இருந்தால் நீங்கள் "குண்டு" தான் சந்தேகம் இல்லை. குனிந்து நில்லுங்கள். உங்கள் விலா என்புக்குக் கீழே தோல் ஒரு அங்குலத்திற்கு கீழே தொங்கினால் உங்கள் உடம்பு "பெரிது" தான்! சந்தேகம் வேண்டாம். சரி இதற்கு எல்லாம் என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? உணவுப் பழக்கம், இயந்திர வாழ்க்கை, போதுமான அளவுக்கு உடற்பயிற்சி, உடல் உழைப்பு இல்லாமல் இருக்கிறது இது எல்லாம் தான்.

அப்பா ஆம்மா குண்டாக இருந்தால் குழந்தையும் குண்டாகப் பிறக்குமா? 100 இற்கு 40 பேருக்குத் தான் இப்படி பிறக்கும். அதே மாதிரி அப்பா அம்மா இரண்டு பேருமே ஈர்க்குச்சி மாதிரி ஒல்லியாக இருப்பார்கள். அவர்களில் 10 சதவீதம் பேருக்கு குழந்தை குண்டாக இருக்கிறது. அதனால் பாரம்பரியத்தை இதற்கு ஒரு முக்கியமான காரணமாக சொல்ல முடியாது. குழந்தை கொழு கொழு என்று இருக்க வேண்டும் என்பதற்காக சில தாய்மார்கள் அடிக்கடி எதையாவது கொடுத்து உண்ணச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். நீ அழாமல் சமர்த்தாக இருந்தால் உனக்கு சொக்லேட் கொடுப்பேன் என்று பேரம் வேறே பேசிக் கொள்வது. அப்படி எல்லாம் செய்தால் அதுவே ஒரு பழக்கமாக போய்விடும் அதன் பின்பு மாற்றுவது கஷ்டம்.

உங்கள் வீட்டுக்காரரும் சமத்தாத் தானே இருக்கிறார். அவரிடம் கொடுங்கள்... சொக்லேட் என்றால் வேண்டாம் என்றா சொல்ப்போகிறார்? மருமகளுக்கு பிரசவ நேரம் என்றால் அந்த பொண்ணை அசையாமல் ஒரே இடத்திலே உட்கார வைத்து விதவிதமாக சமைத்துப் போடுகிற மாமியூர்கள் இருக்கிறார்கள். ஆச்சரியப்பட வேண்டாம். அப்படியும் சிலபேர் அங்கே இங்கே உண்டு. இது எல்லாம் நல்லது என்றா நினைக்கிறீர்கள்? உடம்பு பெருத்து விடும். பிரசவத்திற்கு முன்னாடியும் சரி பின்னாடியும் சரி எப்போதும் போல வீட்டு வேலைகளை செய்து கொண்டே வாருங்கள். உடம்பு நன்றாக இருக்கும். குழந்தைக்குப் பால் கொடுக்காவிட்டாலும் தாய்க்கு எடை கூடும்.

சரி பொதுவாக எடையைக் குறைப்பதற்கு என்ன வழி? முதலில் திடீர் என்று ஒரே நாளில் அதைக் குறைப்பதற்கு முயற்சி செய்யக்கூடாது. கொஞ்சம் கொஞ்சமாக அதை வழிக்கு கொண்டு வர வேண்டும். உணவுக் கட்டுப்பாடு மிகவும் முக்கியம். பழம், காய்கறி அதிகமாக சேர்த்துக் கொள்ளலாம். கிழங்கு வகைகளைக் குறைக்கலாம். முக்கியமாக உருளைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு. கொழுப்புச்சத்து, மாச்சத்து ஆகியவற்றைக் குறைக்க வேண்டும். அரிசி, வாழைப்பழம், கிழங்கு வகை, வெண்ணெய், கேக், முந்திரிப்பருப்பு, கிரீம் இவை எல்லாம் குறைத்துக் கொள்ள வேண்டிய உணவு வகைகள். இரண்டு வேளையோ அல்லது மூன்று வேளையோ சாப்பிட்டால் அத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். அதற்கு நடுவில் நொறுக்குத்தீனி சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

பொது இலட்சியங்களுக்காக எத்தனையோ தியாகிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். நீங்கள் உங்கள் சொந்த இலட்சியத்திற்காகவாவது தியாகி ஆக முடியுமா? என்று பாருங்கள். வேறு ஒன்றுமில்லை. வாரம் ஒரு தடவை சாப்பிடாமல் இருக்கலாம். எல்லா மதமும் ஒவ்வொரு விதத்தில் உண்ணாவிரதத்தை வலியுறுத்துகிறது. அதனால் மத சம்பிரதாயமாகக் கூட இதை கடைப்பிடிக்கலாம்.ஆரம்பத்தில் உடல் எடை குறைக்கும் போது முதலில் உடம்பில் உள்ள நீர் அளவு குறைய ஆரம்பிக்கும். அதற்குப்பின் தான் உடல் எடை குறைய ஆரம்பிக்கும். அந்த சமயத்தில் நாம் சேர்த்துக் கொள்கின்ற உப்பின் அளவையும் குறைக்க வேண்டும். சாப்பிடுவதில் சில நுணுக்கம் இருக்கிறது. செய்து பாருங்கள். மெதுவாக சாப்பிட வேண்டும். இப்படி செய்தால், மூளையில் இருக்கின்ற பசி உணர்வை தூண்டுகின்ற இடம் பசியை தூண்டாமல் மந்தப்படுத்திவிடுகிறது. அதிகமாக சாப்பிடுவதற்கு முன்னே பசி தணிந்து விடுகிறது.

உணவை நன்றாக மென்று சாப்பிட வேண்டும். அடுத்தவர்களை பரிமாறச் சொல்லாமல் நீங்களே வேண்டும் என்பதை எடுத்துப் போட்டுச் சாப்பிடுங்கள். சாப்பிடும் போது முதலில் புரத உணவை எடுத்துச் சாப்பிடக் கூடாது. மற்ற வகையை முதலில் சாப்பிட வேண்டும். சிலபேர் உடம்பு இளைப்பதற்கு மருந்து சாப்பிடுவார்கள். அது எல்லாம் பசியை உண்டாக்காது. அதனால் உடம்பு இளைக்கும். மருந்தை நிறுத்தினால் மறுபடியும் நன்றாக பசி வந்து விடும். அதனால் மருந்தைவிட மனக் கட்டுப்பாடு தான் முக்கியம். உடம்பைக் குறைப்பதற்கு சில அறுவை சிகிச்சை எல்லாம் கூட இருக்கிறது. இருந்தாலும் அந்த அளவிற்கு ஏன் போக வேண்டும். உடற்பயிற்சி, நீச்சல், வேகமாக நடப்பது, யோகாசனம் இதிலே எது உங்களுக்கு வசதியோ அதைச் செய்யுங்கள் போதும். உடம்பை அமுக்கி விடுவது, நீராவிக் குழியல் இது எல்லாம் கூட உடம்பு குறைய ஓரளவுக்கு உதவும்.

உடம்பைக் குறைப்பதற்காக ஒருவர் உடற்பயிற்சி செய்ய ஆரம்பித்தார். அவருக்கு ஏற்கனவே வயதாகி விட்டது. வயிற்யைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என்று என்னைப் பார்த்துக் கேட்டார். நான் சொன்னேன் தினமும் காலையில் இப்படி வந்து நின்று முழங்காலை மடிக்காமல் குனிந்து உங்கள் கால் கட்டை விரலைத் தொடுங்கள் சரியாக போய் விடும் என்றேன். அதற்காக அவர் நான் குனிந்து கால் கட்டை விரலைத் தொடுவதற்கு தயாராகத் தான் இருக்கிறேன். ஆனால் என்னுடைய கால் கட்டை விரல் எங்கே இருக்கிறது என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை அது தான் கடினமாக இருக்கிறது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதானியின் பூநகரி, மன்னார் காற்றாலைகளுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

**இந்தியாவின் அதானி நிறுவனத்தினால் முன்மொழியப்பட்டுள்ள மன்னார் மற்றும் பூநகரி ஆகிய இரு காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்களுக்கும் தற்போது அனுமதி வழங்க முடியாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

இந்த திட்டத்திற்கான மதிப்பீடு மற்றும் அவற்றின் ஊடாக சூழலுக்கு ஏற்படக் கூடிய தாக்கம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமத்தின் விபரங்கள் உள்ளிட்டவற்றின் மேலதிகத் தகவல்களை சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அதானி நிறுவனத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பூநகரி மற்றும் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்களுக்கு இலங்கை முதலீட்டுச்சபை கடந்த பெப்ரவரி 23 ஆம் திகதி அனுமதிக் கடிதத்தை வழங்கியிருந்தது.

இந்த திட்டமானது 442 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் முன்னெடுக்கப் படவுள்ள நிலையில், இதனூடாக 350 மெகாவோட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பூநகரி மற்றும் மன்னார் காற்றாலை மின்னுற்பத்தி திட்டங்களுக்கு அனுமதி வழங்குவதற்கு மேலும் பல தகவல்கள் அவசியமாக உள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

# 13 ஆவது திருத்தம் என்பது இன்று நேற்று வந்த ஒன்றல்ல

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

"எமது சட்டப் புத்தகத்திலேயே இருக்கின்ற அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது ஏன் பிரச்சினைகள் வருகின்றன?" - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக தென்னிலங்கையில் மீண்டும் எழுந்துள்ள எதிர்ப்புக்கள் தொடர்பில் கேட்டபோதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என்பது எமது சட்டப் புத்தகத்தில் இன்று அல்லது நேற்று வந்த ஒன்றல்ல.

நாட்டிலுள்ள இனங்களும் மதங்களும் ஏனைய இனங்களையும் மதங்களையும் மதிப்பதில்லை. அதுவே இதற்கான பிரதான காரணமாக உள்ளது. சிங்கள மொழி பேசும் எமது சிங்கள மக்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றிச் செயற்படு கின்றனர்.

அதே போன்றே தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றி செயற்படுகின்றனர்.

அவ்வாறே முஸ்லிம் மக்களும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் தொடர்பில் நம்பிக்கையின்றிச் செயற்படுகின்றனர்.

இவ்வாறு ஒவ்வொருவரும் நம்பிக்கையற்ற நிலையிலேயே இருக்கின்றனர். இதுவே இங்குள்ள பாரிய பிரச்சினையாகும் எனவே மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் நம்பிக்கையினைக் கட்டியெழுப்ப வேண்டியது மிக அவசியம் எனத் தெரிவித்தார். (நி-6)

# போதைப்பொருள் கடத்தல்

## வருட இறுதிக்குள் முற்றாக ஒழிக்கப்படும்

### பொலிஸ் மா அதிபர் திட்டவட்டம்

(கொழும்பு)

இந்த ஆண்டின் இறுதிக்குள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகம் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த மார்கழி மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுக்திய நடவடிக்கை நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.



இந்த செயற்பாட்டின் மூலம், இதுவரை நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட சுற்றி வளைப்புகளின்போது போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என 138,116 பேரும்,பட்டியலிடப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த 965 உறுப்பினர்களுள் 703 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் ஆயுதப் படையினரின் ஒத்துழைப்புடன் 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகம் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (நி-6)



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கைதடி- நபீல்ட் - செவிப்புலன், விழிப்புலன் அற்றோர் பாடசாலைக்கு கடந்த வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்டிருந்தார்.இதன்போது பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியை வழங்கி உள்ளார். (படம்- சுபேசன்)



அமரர்.கலாநிதி கார்த்திகேசு திருப்பதி தனது கலாநிதி பட்டத்திற்காக ஆக்கிய மாணிக்கவாசகரும் பெரியாழ்வாரும் கையாண்ட இலக்கிய உத்திகள் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் கோப்பாய் சரவணபவனந்த வித்தியாலயத்தில் ஐ.சிவலோகநாதன் தலைமையில் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)



உலக இரத்ததான தினத்தையொட்டி நேற்று முன்தினம் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் தேசிய இளைஞர் படையணியின் ஏற்பாட்டில் மாவட்ட மருத்துவமனையில் இடம்பெற்ற இரத்ததான முகாமில் இளைஞர் யுவதிகள், உட்பட பலர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கியிருந்தனர். (படம்- ஜோசப்நயன்)



யாழ்.கன்னாதிட்டி காளி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பாபுஜி கே.கணேசன் என்பவரால் ஒரு லட்சம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளரின் சேவை நலன் பாராட்டு விழாவும், புதிய நீர்ப்பாசன பொறியியலாளரிற்கான வரவேற்பு விழாவும் கடந்த புதன்கிழமை இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், இரணைமடு பாரிய நீர்ப்பாசன திட்ட முகாமைத்துவ அலுவலகத்தில் நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஐந்து வருடத்துக்கு ஒருமுறை நடக்கின்ற இனவாத அபிஷேகம்

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த யுத்தம் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் கடந்து விட்டன.

ஆயினும் இன்னமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிங்களப் பேரினவாதம் ஒருபோதும் தயார் இல்லை என்பதுதான்.

இப்போதுகூட நாடு கந்தறுந்து காவடி எடுக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டதன் அடிப்படையில், சர்வதேச நாணய நிதியம் கொடுக்கின்ற உதவித்திட்டத்தின் ஊடாகவே இலங்கையின் சீவனோபாயம் நடந்தாகிறது.

இருந்தும் இவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கு ஆட்சியாளர்கள் தயாரில்லை. அண்மையில்கூட, பௌத்த பிக்குகளுக்காக புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலையை திறந்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்குவது கட்டாயமானது. அதனைச் செய்யத் தவறுவோமாயின் அது அரசியலமைப்பை மீறுகின்ற செயல் எனக் கூறியிருந்தார்.

ஆக பௌத்த பிக்குகளிற்கென தனியான வைத்தியசாலையை அமைப்பதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக உள்ளது. உண்மைத்துறவை விரும்பி ஏற்ற கௌதம புத்தபிரான் எல்லாப் பற்றுக்களையும் துறந்தவர். ஆனால் அவருடைய போதனைகளைப் பின்பற்றுவதற்காகப் புறப்பட்ட புத்த பிக்குகள், பொதுமக்களை அனுமதிக்கின்ற வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்குத் தயாரில்லை எனும்போது புத்தபிரானின் துறவு இங்கு பின்பற்றப்படுகிறதா என்ற கேள்வி எழவே செய்யும்.

எது எவ்வாறாயினும் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பதற்கு பௌத்த பீடங்களைப் பாதுகாக்கின்ற தேவை அரசாங்கத்திற்கு உண்டு என்பது மட்டும் தெளிவாகிறது.

ஆம் இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க வேண்டுமாயின், சிங்கள மக்களிடையே அமைதியான மனநிலை ஏற்பட வேண்டும். அதாவது இந்த நாடு இங்கு வாழுகின்ற அனைத்து மக்களுக்குமானது. இங்கு இன, மத, மொழி பேதங்களுக்கு இம்மியும் இடம் இல்லை என்ற மனநிலை சிங்கள மக்களிடம் ஏற்பட வேண்டும். ஆனால் அந்த மனநிலை ஏற்படுவதற்கான சூழமைவு உருவாகுவதை சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளும் பௌத்த பிக்குகளும் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

மாறாக 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற தேர்தல்களின்போது இனவாதத் தீயை பேரினவாதம் மூட்டி விடும். எந்தத் தேர்தல் வந்தாலும் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்படப் போகிறது என்ற பிரசாரத்தை மேற்கொள்வதன் மூலமாகவே தேர்தல் வெற்றியை தமதாக்குகின்ற தந்திரோபாய நிலைமை இருக்கிறது.

ஆக ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இலங்கையில் நடக்கின்ற இனவாத அபிஷேகம் ஒருபோதும் இந்த நாட்டை உய்யவிடப் போவதில்லை என்பதுதான் உண்மை.

### ஐ.எம்.எப் நிதி உதவி இன்றி

# நாட்டை கட்டியெழுப்புவோம் என்று கூறும் முட்டாள் தலைவர்கள் உள்ளனர்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின்றி நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று கூறும் முட்டாள் தலைவர்கள் நாட்டில் உள்ளனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கம்பஹாகவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்களில் சில அரசியல் கட்சிகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாமல் பயணிக்க முடியும் என கூறுகின்றன. இந்த முட்டாள்தனமான கதையை நம்பி ஏமாற வேண்டாம் என்று 220 இலட்சம் மக்களிடமும் கேட்டுக்கொள்கிறேன். உலகப் பொருளாதார மற்றும் வர்த்தக முறைகள் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உருவாக்கப்பட்ட சர்வதேச நிதிச் சட்ட அமைப்பை அடிப்படையாக கொண்டவையாகும். சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, GAT WTO போன்றவற்றின் மூலம் உலகப் பொருளாதார முறைமை தாபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம் இல்லாமலேயே இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என யாராவது முட்டாள்தனமான வீரவாதத்தை முன்வைத்தால் அது உலக நகைச்சுவை என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்களுக்குச் சாதகமான சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையை எட்டுவதற்கான வாய்ப்புகள் இருந்தும், இன்று அவ்வாறான உடன்பாடு எட்டப்படவில்லை. மக்களின் வலிகளுக்கு முன்னுரிமை கொடுத்து IMF ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவில்லை. அரசாங்கமும் ஆட்சியாளர்களும் தரையில் கால் பதிக்காமல், வானில் இருந்துகொண்டு கைச்சாத்திட்ட மக்கள் விரோத ஒப்பந்தமே தற்போதைய அரசாங்கம் இணக்கம் கண்டுள்ள ஒப்பந்தம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் பொருளாதார சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்போது, அவை நாட்டுக்கு பொருத்தமானதாகவும் அமைய வேண்டும். இந்த ஒப்பந்தங்கள் மனிதாபிமானமாக இருக்க வேண்டும். மனிதனை பாதுகாத்து வாழ வைப்பதே மனிதனின் உன்னத கடமையாகும். எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் மனிதனை பாதுகாக்கும் ஒன்றாக அமையவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்த IMF ஒப்பந்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வோம் என IMF பிரதி நிதிகளிடம் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளோம் என்றார். (ம-7)

## வேலூர் தொழி.கல்லூரி துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்த இந்தியாவின் வேலூர் தொழில்நுட்பக் கல்லூரி துணைவேந்தர் ஜி.விஷ்வாகாந்த் தலைமையிலான குழுவினர், நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கல்வி ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட துடன் வேலூர் தொழில்நுட்பக் கல்லூரியில் இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களையும், குறுங்கால புலமைப்பரிசில்களையும் வழங்குவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

மேலும் இரு பல்கலைக்கழகங்களும் இணைந்து விரைவில் புரிந்துணர்வு உடன் படிக்கை ஒன்றை கைச்சாத்திடவும் தீர்மானித்தன. (நி-6-33)

## சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த 4 உணவகங்கள்

### ரூ.1 லட்சத்து 50 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த 4 உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கரைச்சி சுகாதார பரிசோதகர்கள் கிளிநொச்சி மருத்துவமனையை அண்டிய பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்து இருந்தனர்.

இதன்போது நான்கு உணவகங்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த நான்கு உணவக உரிமையாளர்களுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மன்று எச்சரித்து விட்டுள்ளது. (நி-6-316)

## ஆலயங்களை சீரமைப்பதற்கான காசோலைகள் வழங்கி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஒருதொகுதி ஆலயங்களை சீரமைத்து புனரமைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்து கலாசாரத் திணைக்களத்தின் 2024 இற்கான நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கிடைக்கப் பெற்ற நிதியே குறித்த ஒரு தொகுதி ஆலயங்களுக்கு நிதியுதவியாக வழங்கி வைக்கப்பட்டன. இதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 25 ஆலயங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் நிதி வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த தரப்பினருக்கான காசோலைகள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டன. (நி-6)

## நெத்தலி ஆறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு

முல்லைத்தீவு விஸ்வமடு நெத்திலி ஆறு பகுதியில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பல விவசாயிகளின் வயல் நிலங்களில் இரவு, பகலாக தொடர்ச்சியாக காணி உரிமையாளரின் அனுமதி இன்றி சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரங்களின் மூலம் மணல் அகழ்வு இடம்பெறுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெற்செய்கை மேற்கொள்ளும் பொழுது காட்டு யானையின் தொல்லை ஒவ்வொரு வருடமும் இடம் பெறுவதாகவும், வயல் அறுவடை முடிந்ததும் மணல் கொள்ளை இடம் பெறுவதாகவும் இதனால், பாரிய அளவில் வயல் நிலங்கள் சீர்செய்வதற்கான பணச் செலவு ஏற்படுகின்றது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக உரிய தீர்வுகளை பெற்று விவசாய நிலங்களில் மணல் அகழ்வை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

## புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலைக்கு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் பொறியியலாளருமான அமரர் வேலுப்பிள்ளை சிவயோகன் ஞாபகார்த்தமாக ஒரு மாடிக் கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத் தொகுதி நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

✶ தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 1 ½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் பிரதான காபெட் டச்சு வீதியில் இருந்து 300m தூரம்.
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதிகள்.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 12 இலட்சம். தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்:- காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(1243)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

**077 986 5457, 077 241 7589**


# தேசிய உதைப்பந்தாட்ட அணியில் யாழினைச் சேர்ந்த சுஜேகிருஷ்ணா



தேசிய உதைப் பந்தாட்ட 20 வயது பிரிவில் யாழினைச் சேர்ந்த மோ. சுஜே கிருஷ்ணா தெரிவாகியுள்ளார்.

புத்தூர், ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த மோகன் சுஜேகிருஷ்ணா இந்த ஆண்டு தேசிய அணியில் இடம்பிடித்துள்ளார்.

இவர் யாழ். மத்திய கல்லூரி, St.Joseph college, Solid f.c. Sarandi f.c யாழ்.மாவட்ட அணி, யாழ். ஞான முருகன், எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றில் விளையாடி வருகிறார்.

அதே வேளை 2019 ஆண்டில் தேசிய உதைப் பந்தாட்ட 16 வயது பிரிவிலும் தெரிவாகி யிருந்தார்.

மேலும் வடக்கில் இருந்து தேசிய அணிக்கு முதல் தெரிவான வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-6)


✓ஒரு தசாப்தத்திற்கு மேலான சேவை (2012 ஆம் ஆண்டிலிருந்து)
✓1 வருடத்திற்கு 100ற்கும் மேற்பட்ட திருமணங்கள் எமது சேவை மூலம் நிச்சயம்-செய்யப்படுகின்றன
✓வடக்கு, கிழக்கு வெளிநாட்டு மணமக்களின் பதிவுகள்

www.EQMarriageService.com
ஒன்லைன் திருமண சேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bamabalapity, Colombo 04
CALL 076 664 9401

**மணமகன் தேவை**

| | |
|---|---|
| 1988. இந்து. மஹம்<br>பட்டதாரி<br>ACCOUNTANT, AUSTRALIA<br>சொந்த இடம்: நல்லூர்<br>மணமகள் பதிவு இல: 10470 | 1992. இந்து மூலம்<br>பட்டதாரி<br>DOCTOR<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல: 8151 |
| 1985. இந்து. அஸ்வினி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: சாவகச்சேரி<br>மணமகள் பதிவு இல: 8006 | 1997. இந்து. திருவோணம்<br>பட்டதாரி<br>NURSE, U.K<br>சொந்த இடம்: சிலாபம்<br>மணமகள் பதிவு இல: 10284 |

**மணமகள் தேவை**

| | |
|---|---|
| 1991. இந்து ஸ்வாதி<br>பட்டதாரி<br>ENGINEER, AUSTRALIA<br>சொந்த இடம்: நல்லூர்<br>மணமகன் பதிவு இல: 10708 | 1989. இந்து. பூரட்டாதி<br>பட்டதாரி<br>DOCTOR<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல: 7718 |
| 1988. இந்து ஹஸ்தம்<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: மிருசுவில்<br>மணமகன் பதிவு இல: 9115 | 1981. கத்தோலிக்கம். உத்தராடம்<br>பட்டதாரி<br>CIVIL ENGINEER, U.K<br>சொந்த இடம்: மன்னார்<br>மணமகன் பதிவு இல: 10414 |

பதிவுக் கட்டணம் மட்டுமே (சி-2319)
திருமணம் சரி வரும் போது தரகர் கூலி எதுவும் இல்லை
பதிவுக்கு www.EQMarriage Service.com/create-profile


# கே.சீ.சீ வெற்றிக்கிண்ணம் இறுதியாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

கே.சீ.சீ வெற்றிக் கிண்ண 40 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்ட போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து யாழ். ஜொனியன்ஸ் அணி மோதவுள்ளது. குறித்த வெற்றிக்கிண்ணம் 31ஆவது ஆண்டாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6)


**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (175)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

**காணி விற்பனைக்கு**

கரவெட்டி, சரஸ்வதி வித்தியாலய வீதியில் உள்ள நான்கு பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக் குண்டு. தொடர்பு கொள்ளவும்

சொர்ணலிங்கம்
**077 354 6176** (சி-2320)

**புதிய காவலன் திருமண பொருத்துநர்**
மாலி சந்தி, அல்வாய்.

**மணமகள் தேவை**

MBA, B.Eng (Hons) (London Metropolitan University) படித்த Business Development Manager ஆக பணி புரியும் London இல் நிரந்தர வதிவிட விசாவுள்ள மணமகனுக்கு பெற்றோர் உயர்கல்வி கற்ற அழகிய மணமகளை எதிர்பார்க்கிறார்கள். (அவசரம்)
பிறந்த திகதி - 03.04.1985, நட்சத்திரம் மகம்
உயரம் - 5 அடி 10 அங்குலம் (C-0605)

**077 663 0273**

*We, the principal, Staff & Students of*

**St.John's College, Jaffna,**

*Cordially invite the parents, Old Boys and well-wishers to*

***The Annual Prize Giving***

*to be held on Saturday, 22nd June 2024, at 9.00 a.m, in the Jubilee Hall.*

*We are honoured to have*

***Professor Nishan Canagarajah,***

*President and Vice-Chancellor of the University of Leicester, U.K.,*

*accompanied by*

***Mrs. Thabithal Canagarajah***

*as our chief guest* (601)

**நாகபூஷணி திருமண சேவை**

பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்
மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்யப்பட்டு மிகத் துரிதமாகத் திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்
10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(BCAS Campusக்கு பக்கத்து லேன்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306 (1245)

**வீடு, காணி விற்பனைக்கு**

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
**076 177 4183**
**077 520 6482** (1240)

**விற்பனைக்கு**

பாவித்த நல்ல உழவு இயந்திரம் 25 சிறி விற்பனைக்குண்டு
விலை - ஐந்து லட்சம்
இடம் - யாழ்ப்பாணம் (1237)
தொடர்புகளுக்கு
**077 786 5637**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனையிறவில்...

குறித்த பகுதியில் இவ்வாறு 4 குண்டுகள் காணப்படுவது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இன்று நீதிமன்றின் அனுமதியுடன் குண்டை பாதுகாப்பாக அகற்றி செயலிழக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,100)

## வெள்ளை ஈ...

டுள்ளது.

தற்போது குறித்த தொகை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## சரியான...

யத்திற்கும் செல்வதற்கு முன்னே நாங்கள் இதனைக் கூறியுள்ளோம். அந்த நேரம் சென்று இருந்தால் நாடு இந்த நிலைக்கு வந்திருக்காது இப்படி ஒரு பிரச்சினையும் உங்களுக்கு வந்து இருக்காது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தமானது மக்கள் மையப்பட்டதல்ல.

மஹஜன சம்பத
திகதி 2024.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 5505
H 1 2 3 4 4 3
அத சம்பத H 3 4 4 3
சீட்டிழுப்பு இலக்கம் 080

தன நிதானய
திகதி - 2024.06.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1535
S 39 44 54 58 S
02139

மெகா பவர்
திகதி 15/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1853
Q 05 12 49 75 80
31166

லக்கி 7 VIP
திகதி 2024.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 0331
Y 0 8 9 9 7 9 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3747
சீட்டிழுப்பு திகதி 15.06.2024
R 11 12 47 63
R 07555

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.15
சீட்டிழுப்பு இலக்கம் 0814
தனுசு 15 32 56 57 தனுசு
18958 16

அது பலதரப்பட்ட பிரச்சினைகள் உள்ளது பல அரசியல் கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கின்றது.

தேர்தலுக்குப் பிறகு சூழ்நிலையாக மாறலாம். எது எப்படியோ ஆனாலும் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்யப்படும் ஒப்பந்தங்கள் மக்களுக்கு பயன்பட்டதாகவும் பொருளாதார முன்னெடுப்பாகவும் நடைபெற வேண்டும் என்றார். (ம-7)

## தமிழ் மக்களை...

யின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாரில்லை.

எனவே, இந்த நாட்டை மாற்றுவதற்காக அனைத்து இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு புதியதொரு திசையை நோக்கி நகர வேண்டும் எனத் தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேறாத போதிலும், அது வெள்ளை யானையாகக் கருதப்பட்டாலும் தற்போது வடக்கு, கிழக்கு மக்கள் 13 என்பது தாம் வென்றெடுத்த உரிமையாகவே கருதுகின்றனர் என நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார். (ம-7)

## எந்த நாட்டிலும்...

செய்யப்படலாம் என்ற ஆபத்தான நிலைமை காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்புப் பற்றிய துறை சார் மேற்பார்வைக் குழு அண்மையில் அவரது தலைமையில் கூடியபோதே பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராகக் கணிசமானளவு சாட்சிகள் அவர்களிடம் இருப்பதாக குறித்த பொறிமுறையின் ஊடாக அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு யுத்தக் குற்றம் இழைத்ததாகச் சாட்சி கிடைத்திருக்கும் இந்நாட்டு இராணுவத் தலைவர்களுக்கு எதிராக நீதிமன்ற சட்ட அதிகாரத்தின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு ஏற்கெனவே சில நாடுகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-7)

## 13ஐ தேர்தல்...

ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் வடக்குக்கு சென்று 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதி வழங்குகிறார்கள். முழு நாட்டுக்கும் இடையூறாக இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை துரிதமாக அபிவிருத்தி செய்தார். அரசியலமைப்பின் பிரகாரம், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழர்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் எமது ஆட்சியில்தான் அபிவிருத்தியடைந்தது.

தேர்தல் கால பிரசாரமாக அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். 13 ஆவது திருத்தம் பற்றி அனைவரும் பேசுகிறார்கள். ஆனால் காலவரையறையின்றி, பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் பற்றி எவரும் பேசுவதில்லை. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் தமிழர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் அறியவில்லையா?

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கட்சி என்ற ரீதியில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார். (ம-7)

## வாட...

துள்ளது.

2026ஆம்ஆண்டிற்குள் இந்த வரி முறையை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கைக்கு, இலக்கு வைத்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரசாங்க வருவாயை அதிகரிக்கும் நடவடிக்கையாக இந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையுடனான கடன் வசதி திட்டத்தின் இரண்டாவது மீளாய்வின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தமிழ்ப்...

போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"எம்மிடையே இருக்கும் தேசிய நல்லிணக்கமும் அதனூடான அணுகுமுறைகளும் மட்டுமல்லாது எமது தற் [illegible] தில் எமது இனத்தின் வரலாற்றை சொல்லும் மன்னர்கள் பலரது சிலைகள், வரலாற்று சான்றுகள் மற்றும் கட்டடங்கள் நிறுவப்பட்டிருப்பதற்கு காரணமாக இருக்கின்றது.

ஏற்கெனவே, யாழ்.மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்திலுள்ள மன்னர்களது சிலைகள், முத்திரைச் சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை, யாழ். மடத்தடியிலுள்ள தனிநாயகம் அடிகளார் சிலை போன்றனவும் எமது அணுகுமுறைகளால் தடைகளை தகர்த்து நிறுவப்பட்டுள்ளன. இவற்றினூடாகவே எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு உண்மைத்தன்மையுடன் எடுத்துச் செல்லப்படுகின்றன என நான் நினைக்கின்றேன் என்றார். (ம-7)

## மசகு எண்ணெய்...

வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்தோடு, பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 82.62 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

மேலும், சர்வதேசச் சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை நேற்றைய தினம் 2.88 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
15.06.2024 வெற்றி வாரம் 213 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து C
9 3 7 6 3 3
31906 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 24,049,056.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2479 வர்ணம் நீலம் சீட்டிழுப்பு திகதி 15.06.2024 தினம் சனிக்கிழமை
02 21 39 56 W
51068
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 93,603,173.60

சனிதா
திகதி 2024.06.15 வெற்றி வாரம் 4640
07 09 39 56 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,781,167.20
15280

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4191 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.15 தினம் சனிக்கிழமை
29 32 38 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,408,913.60
216108

கப்ருக
X 01 23 37 41 43
1655 சிவப்பு 15.06.2024 சனிக்கிழமை
570065
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 527,892,718.60

அட கோட்டிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2305
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 120,448,618.40
06 09 44 69 A
158596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

(1176)

**074 17 37 684**

## மணமகள் தேவை

யாழ் இந்து 1993 இல் பிறந்த Colombo வங்கியில் பணி புரியும் உயர் பதவி மணமகனுக்கு மணமகள் தேவை.

(1241)

**076 852 9425**

## Show Money

**1%**

லட்சத்திற்கு 1000 மட்டுமே சகல நாடுகளுக்குமான வங்கி இருப்பு/ விசா சேவை

(1192)

**T.P : 075 033 6759**

## கொழும்பில் அறைகள், விடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் விடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து

விடு - 12000/-இல் இருந்து

(C-0607)

V2 GUEST 0743900360 0743900361

## பதவி வெற்றிடம் - Sales Executive

**K.U.S Formwork & Scaffolding (PVT) LTD (வடமாகாணம்)**

கொழும்பில் அமையப்பெற்றுள்ள பிரபல நிறுவனம் ஆகிய K.U.S Formwork and Scaffolding (Pvt) Ltd நிறுவனம் தனது உள்நாட்டு செயற்பாடுகளை வடமாகாணத்திற்கு விரிவுபடுத்தி வருவதால் எங்கள் நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு தகுந்த அனுபவம் வாய்ந்த Sales Executive வடமாகாணத்தில் தேவை.

**எதிர்பார்க்கப்படும் கல்வித் தகைமைகள்**

- விற்பனைத்துறையில் 2 வருட குறைந்தபட்ச அனுபவம் (Minimum 2 years of experience in the field of Sales)
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலில் சான்றிதழ் (Certification in sales and marketing from a recognized institute)

**எதிர்பார்க்கப்படும் ஏனைய தகைமைகள்**

- செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் மற்றும் வாகனம் வைத்திருத்தல் வேண்டும் (Should have a valid driving license (A, A1,B Class) and Vehicle)
- 22 - 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண்/பெண் (Male/Female between the age range of 22-40 years)
- விண்ணப்பிப்பவர் யாழ்ப்பாணத்தில் வசிக்க வேண்டும்

(1227)

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அடிப்படை சம்பளம், வாகன கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் கமிஷன் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள், சுயவிபரக்கோவையை hr@kus.com.lk எனும் Email முகவரிக்கு அனுப்பவும்.

**K.U.S Formwork & Scaffolding PVT Ltd**

**+94 112 572 727**

## இணையவழி (Zoom) தனிப்பட்ட, குழு வகுப்புக்கள்

**Commerce மற்றும் சிங்களம்**

10,11 ஆம் ஆண்டுக்கான வணிகமும் கணக்கீட்டு கல்வியும் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) அனைத்து வயதினருக்குமான சிங்கள வகுப்புக்கள் முதல் 2 வகுப்புக்கள் இலவசம்

(1166)

**077 295 2365**

## IELTS CLASSES

கொழும்புப் பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(861)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## காணி விற்பனைக்கு

➤ யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இருந்து 75m தூரத்தில் வைரவர் கோயில் ஒழுங்கையில்

➤ யாழ் நகரத்தில் இருந்து 10 நிமிட நடைபாதை தூரத்தில்

➤ பண்ணை கடற்கரைக்கு மிக அருகாமையில்

❖ 5 பரப்பும் 10 குளியும் கொண்ட வெறும் காணி விற்பனைக்கு உண்டு.

❖ Hotel, நட்சத்திர வீடு மற்றும் அழகான வீடுகள் அமைப்பதற்கு தகுந்த இடம்.

❖ அமைதியான சூழலில் யாழ் நகருக்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ளது.

(1234)

தொடர்புகளுக்கு :

**075 337 2876**

**Whatsapp : +44 793 276 2452**

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0607)

## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா? உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

(C-0607)

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாரக உள்ளோம்.

**V2 TRAVELS 0768226244**

## Tharany SUPERMARKET

**தாரணி சூப்பர் மார்க்கெட் கிளிநொச்சி கிளையின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு**

**மாபெரும் அதிரடிச் சலுகை**

**ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்**

இச் சலுகை 2024.06.19 மட்டுமே







**1 கிலோ சீனி வாங்கினால் 1 கிலோ சீனி இலவசம்**

ஒரு அலகிற்கு மேற்பட்ட கொள்வனவிற்கு ஒன்று மாத்திரமே வழங்கப்படும்.

**19.06.2024 புதன்கிழமை காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை**



**Tharany SUPERMARKET**

**077 744 0304**

இல.12, திருநகர் வீதி, கிளிநொச்சி.

(கரைச்சி பிரதேச சபைக்கு முன்பாக)

(1240)

## PickMe யாழ்ப்பாணத்தில்

நீங்கள் வைத்திருக்கும் CAR/ VAN/ Lorry/ Motorcycle அனைத்தையும் PickMe Taxi சேவையில் இலவசமாக இணைத்து அதிக வருமானம் பெறலாம்.

(1228)

**077 473 7737**

அழைக்கவும்.

## வீடு/ அறை வாடகைக்கு

தூர இடங்களிலிருந்து யாழ் நகரில் படிக்கும் மாணவர்/ வேலை செய்யும் ஆண், பெண் / சிறு குடும்பத்துக்கு அறைகள் நகருக்கு அண்மையாக சுதுமலையில் உண்டு.

(1158)

**074 031 9808**

**076 789 6016**

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் நகரில் ஆரம்பிக்கவுள்ள Multy Shop இற்கு அனுபவமுள்ள ஆண்,பெண் வேலையாட்கள் தேவை.

(1220)

**077 811 8948**

## மணமகன் தேவை

யாழ் இந்து 1997 இல் பிறந்த திருகோணம் 2 ஆம் பாதம் மகர ராசி அரச வங்கியில் வேலை செய்யும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

(1224)

**077 690 5096**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 266/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 170/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கடலை | - 439/= | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | - 205/= | |
| 01 Ocean மீன் ரின் | - 380/= | ~~500/=~~ |
| 400g நெஸ்டமோல்ட் | - 799/= | ~~830/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |
| 01 ராணி சோப் | - 130/= | ~~145/=~~ |
| 510g ஸ்ரோபரி ஜாம் | - 450/= | ~~490/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 350/= | ~~450/=~~ |
| 1 Kg பிருந்தா கறிமிளாய்த் தூள் | - 1180/= | ~~1600/=~~ |

**400g Anchor**

1005/=




~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1247)

**Happy Supermarket 0777 8080 30**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.